சுமைகள்

சுமைகள் 19 தை, மாசி 97 Sumaihal Nr 19 Jan, Feb 97 Lossalg Kr 10

# தமிழரைத் திருப்பி அனுப்பும் முயற்சியும் உண்ணாவிரதப் போராட்டமும்.

நோர்வேயின் நீதியமைச்சின் கட்டளையின் பேரில் பல தமிழர்களை நாட்டுக்குத் திருப்பி அனுப்ப நோர்வேஜிய நீதியமைச்சும் காவற் துறையும் முயன்று வருகின்றது. அதாவது தற்போது இலங்கையில் தமிழர்கள் வாழ்வது பாதுகாப்பு எனவும், அவர்களின் உயிருக்கு எந்த வித ஆபத்தும் இல்லை என்பதாலும், வடக்கு கிழக்கு போன்ற பகுதியைத் தவிர்ந்த இடங்களில் தமிழர்கள் எந்தவித ஆபத்தும் இன்றி வாழமுடியும் என்பதாலுமே தாம் இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்புகின்றோம் என நோர்வேஜிய நீதி அமைச்சு கூறிகொள்கிறது.

நாடு முழுவதும் இதனை எதிர்த்து பலர் பலவழிகளில் குரல் கொடுத்த போதிலும் இந்த கொடுமைக்கு நேரடியாகப் பாதிக்கப்பட்ட சிலர் இதற்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இவர்கள் 14 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு 26.1 அன்று உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டனர் இவர்கள் உண்ணாவிரதம் இருக்கும் போது

> **புரட்சி நடைபெற வேண்டுமானால் புரட்சிகரக்கட்சி ஒன்று இருக்க வேண்டும் புரட்சிகரகட்சி ஒன்று இல்லாவிட்டால், மார்க்சிய லெனினிசப் புரட்சிர தத்துவத்தின் அடிப்படையில் மார்க்சிய லெனினிச புரட்சிகர நடையில் அமைக்கப்பட்ட கட்சி ஒன்று இல்லாவிட்டால் ஏகாதிபத் தியத்தையும் அதன் வேட்டை நாய்களையும் தோற்கடிப்பதில் தொழிலாளர் வர்க்கத்திற்கும் பரந்துபட்ட பொதுமக்களுக்கும் தலைமை அளிப்பது சாத்தியமாகாது.** (மாவோ) .

# புலம்பெயர்ந்த நாடுகளில் தமிழ் ஏன் கற்கவேண்டும்?

றயாகரன்

புலம் பெயர்ந்த நாடுகளில் பல சிறுவர்கள் தமிழ் கல்வி நிறுவனங்களையும், சிறு சஞ்சிகைகளையும், ஒலி, ஒளி நாடாக்களையும் வெளியிட்டு தமிழ் கல்வியை நோக்கிய கவனத்தைச் செலுத்துகின்றனர். இந்த முயற்சியில் சிலர் இதை வியாபாரமாகவும், சிலர் தமது குறுகிய நோக்கிலும், பலர் பரந்த நோக்கிலும் செயற்படுகின்றனர்.

இந்த முயற்சியில் ஈடுபடும் 99வீதம் பேர் தமிழ் கல்வி புலம் பெயர்ந்த இந்தக் குழந்தைகளுக்கு, ஏன் தேவை என்பதை புரியாத நிலையில் தமிழைக் கற்பிக்கின்றனர். கற்பிப்போர், பேற்றோர், குழந்தைக்கு ஏன் தமிழைக் கற்பிக்க வேண்டும் என்ற கேள்விக்கு சரியான நிலையில் இருந்து இக்கல்வியைப் புகட்டாமையினால், இந்த முயற்சி எதிர்காலத்தில் பலத்த தோல்வியை ஏற்படுத்தும் விடையமாகவுள்ளது.

அண்மையில் பரீசில், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பாப்பா பாரதிப் பாடசாலையின் வெளியீடான இரு ஒளிநாடாக்களை ஆய்வு செய்யும் நோக்கில் ஒரு விவாதம் நடைபெற்றது. அந்த ஒளிநாடா தொடர்பான விவாதம். மற்றம் நோர்வேயில் வெளியாகிய சின்னப் பூக்கள் ஒலி நாடா என்பவற்றை எடுத்து நாம் நோக்கும் போது இதன் பின்னுள்ள கடின உழைப்பு, முயற்சி, பரந்த நோக்கம் என்பன எல்லாவற்றையும் விட பாராட்டப்பட வேண்டியதாகும..

இந்தப் பாராட்டு என்பது அவற்றை சரியானதாக மாற்றிவிடாது. சரியான ஒன்றைத் தேர்வு செய்வது என்பது இவ்வெளியீட்டாளர்கள் முன் உள்ள சவாலாகும்.

4 பக்கம் பார்க்க

Sumaihal post Boks 10, 5125 Bøvågen

இவர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள்:

1) நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை எவரையும் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படாது

2) நோர்வே பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு வடக்கு கிழக்கிற்கு விஜயம் செய்து எமது நாட்டின் நிலையை இங்கு கூறி அவர்களின் கருத்தின் அடிப்படையில் செயற்படுத்தப்படவேண்டும், என்பனவே.

இவர்களின் இந்தக் கோரிக்கையானது மிகவும் நியாயமானதும், நீதியானதும் கூட. இருந்த போதும் இதை செவிமடுக்கும் வகையில் நோர்வேஜிய நீதி அமைச்சை நிர்ப்பந்திக்க முடியாது போனது. மேற்குறிப்பிட்ட எந்த கோரிக்கைகளையும் அது ஏற்றுக் கொள்ளாது இருக்கையில் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது. NOAS என்ற அகதிகள் நிறுவனமும், Trondheim ஆயரும் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இவர்களின் போராட்டம் எந்த வித தீர்வும் அற்று கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்க விடையமாகும். NOAS என்ற அகதிகள் நிறுவனம் உண்ணாவிரதப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது இதைக் கைவிடக் கோரிய பொழுது உண்ணாவிரதம் இருந்தவர்கள் இதை மறுத்தனர். காரணம் அரசிடம் இருந்து தமது அகதிக்கான விண்ணப்பத்தினை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அதற்கான உத்தரவாதம் கிடைத்தபின்பே தாம் நிறுத்துவதாகக் கூறி மறுத்தனர்.

இவ்வாறு மறுத்தவர்கள் திடீரென உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டதன் நோக்கம் என்ன? ***NOAS, ஆயர் ஆகிய இவ்விரண்டு பிரதிநிதிகளும் எவரைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்? இவர்களால், உண்ணாவிரதம் இருந்த வர்களுக்கும் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட உள்ளவர்களுக்கும் ஏதாவது ஓர் முடிவு கிடைத்ததா?*** போன்ற கேள்விகளை இங்கு ஆராயும் அவசியம் உள்ளது. ஆதாவது இவர்கள் ஏன் இதனைக் கைவிட்டனர் என்றால், உண்ணாவிரதம் இருந்தவர்களில் பலர் இறந்து விடுவாரோ என்ற எண்ணமே இதற்கு காரணமாகும். உண்மைதான், பல லட்சக்கணக்கில் பணத்தை ஏஜன்சிகளிடம் கொடுத்துவிட்டு தமது குடும்பத்தையும் தனது வாழ்கையையும் ஏதோ ஒருவிதத்தில் முன்னுக்குக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையில் வந்தவர்களுக்கு, எந்த வித முடிவும் இன்றி தமது உயிரைக் கொடுப்பது என்பது, அவர்களால் ஒருகணமும் நினைத்துப் பார்க்கக்கூட முடியாத விடையமாகும். இவர்களோ அல்லது இவர்களை நடத்தத் தூண்டியவர்களோ நோர்வேஜிய அரசை மனிதாபிமான அரசு என்றும் மக்களை நிந்திக்காத அரசு என்றும் தவறான கணக்கிட்டிருக்கின்றார்கள். ஆதாலால் தான் உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றனர். நோர்வேஜிய அரசு தனது நலனை பாதிக்காத வகையிலும், தனது அரசியல் கருத்தில் இருந்து விட்டுக்கொடுக்காத வகையிலுமே இன்று மனிதாபிமானத்தைக் கதைக்கின்றது. இவ்வாறான அரசை நாம் சாதாரண உண்ணாவிரதப் போராட்டத்தால் அடிபணிய வைக்க முடியாது, இதை நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்.

NOAS, ஆயர் ஆகிய இருவரும் எவரைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் என்ற கோள்வியைப் பார்ப்போமானால் உண்மையில், இவ்விடையத்தில் இவர்கள் இங்குள்ள அனைத்துக் கட்சியின் அரசியலைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசை, மறைமுகமாகப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள், (எந்த எதிர் கட்சிகளும் இப்படியான ஒரு போராட்டத்தின் மூலம் அரசுக்கு ஒரு நெருக்கடியான நிலையை ஏற்படுத்த விரும்புவதில்லை.) அதாவது இவர்கள் இப்பிரச்சனையை முன்னின்று முடித்து வைத்ததன் காரணம் இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் ஏதாவது உயிர் சேதம் நடப்பின், இவ்வரசின் உண்மை முகம் உலகிற்கு தெரிய வருதுடன் தாம் தான் உலகில் மனிதாபிமானிகள் என்ற பொய்யான முகத்திரை கிழிந்து விடும் என்பதாலுமே. இதனடிப்படையில் இவ்விருவரும் இந்த அரசிற்கு எந்தவிதத்திலும் இடைஞ்சல் வரக்கூடாது என்பதாலும், அதேவேளை அரசு இதில் நேரடியாக தலையிடாமலும், இப்பிரச்சனையை தீர்ப்பதற்கு இவர்களால் முடிந்தது. உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்ததத் தூண்டியவர்களும், உண்ணாவிரதம் இருந்தவர்களும் இவற்றை அவதானிக்கத் தவறியது ஒரு இழப்பே. இதனால் உண்ணாவிரதம் இருந்தவர்களுக்கு எந்தவித முடிவும் இன்றி உண்ணாவிரதத்தை கைவிட நேர்ந்தது. அதற்கு முடிவாக உண்ணாவிரதத்தை நடத்தியவர்கயைின் சார்பாக ஒரு குழு நோர்வேஜிய நீதி அமைச்சைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தும் என அறிவித்தார்கள். அதேவேளை நீதி அமைச்சின் உறுப்பினர் ஒருவர் தொலைக்காட்சியில் தோன்றி தாம் நாடுதிருப்பி அனுப்ப என முடிவு செய்த 60 பேரையும் இலங்கைக்கு திருப்பி அனுப்பியே தீருவோம் எனக் கூறினார். இதில் இருந்து இவ்வுண்ணாவிரதப் போராட்டம் எந்த ஒரு பயனையும் கொடுக்கவில்லை என்பதை நோர்வேயில் வாழும் தமிழ் மக்களுக்கு தெட்டத் தெளிவாக கூறுகிறது.

உண்ணாவிரதம் இருக்க தொடங்கினால் மிகக் குறைந்தது அரசின் உறுப்பினர் ஒருவர் வந்து நேரடியாக இவர்களின் பிரச்சனையை கேட்டு அவரின் ஒப்புதலுடன் உண்ணாவிரதத்தை முடிக்க வேண்டும்.

ஏதற்கு எடுத்தாலும் எதிர்கட்சிகள் ஒரு பிரச்சனையை தூக்கிப்பிடித்து

அகதிகளைத் திருப்பி அனுப்பும் விடையத்தில் மாத்திரம் எல்லாக் கட்சிகளும் ஒரே கருத்தை கொண்டிருக்கின்றனர். நோர்வேஜிய அரசு ஓர் மனிதாபிமான நம்மவர்கள் பலர் நம்புகின்றனர், ஆனால் உண்மையில் அதன் முகம் என்ன என்பதை சற்று ஆராய்ந்து பார்ப்போமானால், நோர்வேஜிய அரசு வேளிநாட்டவரை எந்த விதத்திலெல்லாம் ஒடுக்க முடியுமே அந்த விதத்திலெல்லாம் ஒடுக்கி வருகின்றது என்பது தெளிவாகப் புலப்படும். இதனை மறந்த நிலையில் நாடு முழுவதும் இருந்த தமிழர்கள் பல ஊர்வலங்களை நடத்தினர். அது கூட எந்த ஒரு பயனையும் கொடுக்கவில்லை.

இதற்கு என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வி எழும்புகிறது. அதாவது ஐரோப்பிய அரசுகளின் நிலை தெரிந்து ஒரு போராட்டத்தை முன்னேடுக்க வேண்டின் அதை ஒழுங்காக ஐரோப்பிய மக்களிடையே பிரச்சரரப்படுத்தி அவர்களின் பால் இருந்து பலத்த உதவிகிடைக்கும் வகையில் இதை முன்னெடுப்பதுடன், நிறவேறிக்கு எதிரான பல குழுக்களுடன் தொடர்பு கொன்டு அவர்களின் பால் உதவியை நாட வேண்டும்.

# சுமைகளும் மக்களும்

சுமைகள் நீண்ட நாட்களின் பின் உங்கள் கரங்களில் எட்டுகிறது. 1994 இறுதியிலும், 95இலும் பத்திரிகை வடிவில் வெளிவந்த சுமைகள் 96இல் இரு வெளியீடுகளை மாத்திரமே வெளியிட்டிருந்தது. இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதை சொல்லித் தெரியத் தேவையில்லை. மீளவும் 97இல் தன்னை வெளிக்கொண்டுவர முற்படுவதுடன் சுமைகள் தற்போது புதிய ஆசிரியர் குழுவையும் நிறுவியுள்ளது குறிப்பிடத் தக்கது.

உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் யுத்தங்களும் போராட்டங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் சுமைகள் இதற்கு ஒரு தீர்வாக வர்க்கப் போராட்டத்தை ஏற்பதுடன் அதற்கான அறிவு சார்ந்த விவாதத்தை நடாத்தவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன் எமது போராடம் (தமிழ் மக்களின் தேசியவிடுதலைப் போரட்டம்) இன்று தேக்கத்தை அடைந்துள்ளதை எல்லா முற்போக்கு சக்கதிகளும் அறிந்த போதும் அத்தேக்க நிலையில் இருந்து விடுவித்து, இப்போராட்டத்தை வர்க்கப் போராட்டத்துடன் இணைக்க வேண்டிய நிலை இன்று ஒவ்வேரு வர்க்கப் போராட்டச் சிந்தனை உள்ளவர்களிடமும் இருக்கும் ஒரு கடமையாகும். இக்கடமையை செய்வதற்கு தனி நபர்களாகவும், சிறு குழுக்களாகவும் போரிடும் போது, ஏகாதிபத்தியத்தின் உதவியுடன் கூடிய முதலாளித்துவ அரை நிலப்பிரபுத்துவ அரசுகள் இப்போராட்டத்தின் தொண்டைகளை நெரித்துவிடும். ஏனவே இதற்கு அணிசேர்வது முக்கியமானதோர் விடையமாகும். அவ்வாறு அணிசேருவதை உணர்ந்து அனைத்து முற்போக்குகளையும் ஒன்றுகூட்டி விவாதிக்க ஓர் கருத்துக்கு களம் அமைக்கும் வகையிலேயே சுமைகள் இனி வெளிவரவுள்ளது

சுமைகளின் புதிய விலாசம்:-
SUMAIHAL
POSTBOKS 10
5125 BØVÅGEN
NORWAY

தபாற் கணக்கிலக்கம்: –
0826 0868293

***ஆக்கபூர்வமான விமர்சனங்களையும், ஆக்கங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கிறோம் ..***

13 பக்கத் தொடர்(அரசியலும்)

மக்களுக்கம் பிரகடனம் செய்தால் மட்டுமே ஒரு பேரெழுச்சியை சிருஷ்டிக்கவும் பல லட்சக்கணக்கானோரை ஒரு மனிதன் போல ஐக்கியப்படுத்தி யுத்தத்திற்காக தம்மிடமுள்ள அனைத்தையும் அர்ப்பணிக்கச் செய்யவும் முடியும். அவர்களுக்கு வெறுமனே குறிக்கோளை மட்டும் விளக்குவது போதாது. அதை அடைவதற்கான நடைவடிக்கைகளும், கொள்கைகளும் தரப்பட வேண்டும். அதாவது அரசியல் வேலைத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும். தெட்டத் தெளிவிான, திட்டவட்டமான வேலைத் திட்டமொன்று இல்லாமல் போரை இறுதிவரை நடத்தி முடிக்க சகல ஆயுதபடைகளையும், முழுமக்களையும் அணிதிரட்டுவது அசாத்தியம்.

## *எவ்வாறு அணிதிரட்டுவது?*

கருத்தரங்குகள், கூட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், செய்திப்பத்திரிகை, சஞ்சிகைகள், புத்தகங்கள் மூலமும், கலாச்சார நிகழ்ச்சிகள் மூலமும், வெகுஜன தாபனங்கள் மூலமும், கட்சி ஊழியர்கள் மூலமும், கட்சிப் பாடசாலைகள் மூலமும் அணிதிரட்ட வேண்டும். முக்களின் ரசணைக்குப் பொருத்தமான விதத்திலும், மக்களின் உணர்விற்கு இணக்கமான முறையிலும் செய்யப்பட வேண்டும். ஒரு முறை அணிதிரட்டியால் போதாது யுத்தத்திற்கான அணிதிரட்டல் தொடர்ச்சியாக இருக்க வேண்டும். எமது வேலை எமது அரசியல் வேலைத் திட்டத்தை யாந்திரீக ரீதியில் பிரயாணம் செய்வதல்ல. ஏனெனில் அத்தகைய பிரயாணங்களுக்கு எவரும் செவிசாய்க்க மாட்டார்கள். நாம் யுத்தத்திற்கான அணிதிரட்டலை யுத்தத்திலான அபிவிரித்திகளுடனும், படைவீரர்களினதும், மக்களினதும் வாழ்வுடன் இணைக்கவும், அதை தொடர்ச்சியான ஒரு இயக்கமாக்கவும் வேண்டும். இது யுத்தத்தில் எமது வெற்றி பிரதானமாகத் தங்கியிருக்கும் பிரமாண்ட முக்கியத்துவமுடைய ஒரு விஷயமாகும்.

இதுவரை தொகுத்துக் கூறப்பட்ட மார்க்சிய கருத்துக்களின் வெளிச்சத்தில்

18ம் பக்கம் பார்க்க

1 பக்கத் தொடர்ச்சி

இந்தவகையில் குழந்தையின் கவனம்பற்றிய ஒரு கரிசனையூடான கல்வியை குழந்தைக்கு எவ்வாறு புகட்ட வேண்டும் என்பதை கட்டுரை மூலம் ஆராய முற்படுகின்றோம்.

பொதுவாக இன்று குழந்தைக்கான கல்வி புகட்டலில் பெற்றோரும், கற்பிப்போரும் கடைப்பிடிக்கும் அடிப்படை என்ன எனப் பார்ப்போம்.

1) புலம் பெயர்த்த நாடுகளில் உள்ள மொழி தொரியாத பெற்றோருக்கும், குழந்தைக்கும் இடையில் ஒரு தொடர்பு பாலமாக தமிழைப் பயன்படுத்தல்.

2) விடுதலைப்புலி ஆதரவுப் பாடசாலையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்த, தமிழிற்க்கு பங்காற்றுகிறோம் என்பதைக் கூறிக்கொண்டு புகட்டுகின்றனர்.

3) மொழி தெரிந்த, தெரியாத பெற்றோர்கள் ஊரில் உள்ள தமது பெற்றோருடன், உறவினருடன் தொடர்புகொள்ள.

4) நாட்டுக்கு திரும்பிச் செல்ல, என நினைக்கும் ஒரு கணிசமான பகுதியினர்.

5) நாம் தமிழர் எனவே தமிழ் தெரிய வேண்டும் என்போர்.

இந்த வரையறையைத் தாண்டி அல்லது உள்ளடக்கிய தமிழ் கல்வி சிறு அளவில் புலம் பெயர்ந்த நாடுகளில் புகட்டப்படுகிறது. இது பரந்த அளவில் புகட்டப்படாமையும், அதை புறக்கணிப்பதும், சிறுமைப்படுத்துவதும் பெரும்பான்மையாக உள்ளது.

இது ஏன்? என்ற கேள்வியின் ஊடாக தமிழ் கல்வி கற்பிக்கும் நோக்கை எடுத்துக்கொள்வோமாயின் அது ஒரு குறுகிய எல்லை கொண்டதாக அமைவது ஒரு அடிப்படையாகும்.

உதாரணமாக பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையில் ஆங்கிலம் தெரிந்தால், அல்லது வேறு ஒரு பொது மொழி தெரிந்தால், அங்கு தமிழ் கல்வி தேவையற்றது ஆகிவிடுகிறது. இதேபோல் பெற்றோரின் பெற்றோருக்கம் (பேரர்மாருக்கு) அம்மொழி தெரிந்துவிடின் அங்கு தமிழ் மொழி தேவையற்றது ஆகிவிடுகிறது, அடுத்தது விடுதலைப் போராட்டம் முடிவுக்குவரின் தமிழ் கல்வி தேவையற்றதாகிவிடும். தமிழர் எனவே தமிழ் கற்கவேண்டும் என்ற கருத்து பின்னர் தேவை அற்றாகிவிடுகின்றது.

> **தமிழ் கற்பிக்கும் நோக்கம் பரந்த அடிப்படையில் ஏன் தேவை என்பதைப் புரிந்து கொள்ளாத வரை இந்த கற்பித்தல் என்பது ஒரு நிலையில் களைத்துப் போன, அவசியமற்ற, நேர விரையோகம் கொண்ட விடையமாக கற்பிப்போருக்கும், பெற்றோருக்கும், குழந்தைக்கும் எற்படும் என்பதை தெளிவாகப் புரிந்து கொள்வது அவசரமான விடையமாகும்.**

இன்று உலகில் உள்ள ஆயிரக்கணக்காண மொழிகளில் தமிழும் ஒன்று. தமிழ் உலகில் அதிகமாக பேசும் மொழிக் கூட்டத்தினருள் முதல் 15வது இடத்தினுள் உள்ளது. இருந்த போதும் தமிழ் இன்று சமூகத்தின் வாழ்வை தீர்மானிக்கும் ஒரு தனிமனித பொருளாதார ஏற்றத் தாழ்விற்கு பங்களிக்க முடியாத நிலை உள்ளது. அதேவேளை தமிழ் புறக்கணிப்பும் இன்னும் ஒரு அம்சமாகும்.

புலம் பெயர்ந்த நாங்கள் இங்கு தமிழை எமக்கிடையில் பரிமாறுவது கூட அந்த நாட்டு மொழி எந்தளவிற்கு தெரிகிறது என்பதுடன் தொடர்புடைய விடையமாகியுள்ளது. அப்படி உள்ள போது குழந்தைக்கு தமிழ் கற்பிப்பது என்பது கடினமாக உள்ளது. அதுவும் குழந்தை இந்த மண்ணில் பிறந்து இந்த நாட்டு மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளும் போது அக்குழந்தை தமிழைக் கற்கும் தேவை அற்றதாகிறது.

மொழி என்பது ஒரு மக்கள் கூட்டத்துடன் தொடர்பு கொள்ள மட்டுமே இருந்து போது, இன்று உலகில் பொருள் தேடும் விடயத்துடன் தொடர்புடையதாகவும், சீரழிந்தும் உள்ளது. குழந்தைக்கு அந்தத் தேவை இங்குள்ள மொழியால் தீர்க்கப்படும் பட்சத்தில் ஏன் தமிழ் மொழி தேவை என்பது குழந்தையின் நிலையாகிவிடும். தமிழ் மொழி என்பது ஏன் தேவை? என்ற கேள்வியை எழுப்பாத, அதை கற்கை நெறிக்குள் உள்ளாக்காத தமிழ் கல்வி என்பது வரையறுக்கப்பட்ட எல்லையுடன் முடிவிற்கு வரும்.

எம்மைப் பொறுத்தவரையிலும் சரி, குழந்தையைப் பொறுத்த வரையிலும் சரி ஏன் தமிழ் கல்வி தேவை என்று கேட்பின் அது ஒரே ஒரு அடிப்படை விடையத்தை மட்டும் சார்ந்துள்ளது. அது நாம் இங்கு இரண்டாந்தரப் பிரஜை என்பதால் மட்டுமேயாகும். நாம் கறுப்பர்களாக இருப்பது, மூன்றாம் உலகத்தவர்களாக இருப்பது, வறிய நாட்டு மக்களாக இருப்பது என்ற ஒரே ஒரு அடிப்படை மட்டுமே தமிழ் கற்கக் கோருகிறது. அதாவது நான் யார்? எனது சொந்த அடிப்படை என்ன? நாம் ஏன் இங்கு வந்தோம்? ஏன் மூன்றாம் உலக நாடுகள் வறுமையில் உள்ளது? நிற வேற்றுமை என்றால் என்ன? என்ற கேள்விகளில் இருந்தே தமிழ் கற்கும் தேவை எழுகிறது.

நாம் இங்கு இரண்டாந் தரப் பிரஜையாக, வேண்டப்படாத பிரஜையாக உள்ளோம். எம்மீதான நிற இன, அகதி என்ற போர்வையில் ஒரு தாக்குதலை எல்லாத் துறையிலும் சந்திக்கின்றோம். அதை சாதாரண மனித செயற்பாடுகளில் இருந்து விரிவாகப் பார்ப்போம்.

நாம் இந்த மக்கள் கூட்டத்துக்கு ஒரு மனிதனாக அடையாளப் படுத்து முடியாத நிலை மட்டுமே எமது சொந்த அடையாளத்தை தேடவைக்கிறது. அந்த சொந்த அடையாளம் என்பது தமிழை வெறுமனே தெரிந்து கொள்வதனால் மட்டும் தீர்ந்து விடுவதில்லை. தமிழை நான் ஏன் கற்க வேண்டும் என்ற கேள்வியை குழந்தைக்குப் புகட்டும் போது பெற்றோர் கற்க வேண்டிய நிலையில்

உள்ளனர்.

அநேகமாக 99வீதமான பெற்றோர் உலகில் என்ன நடக்கிறது என்பதே தெரியாத ஒரே சூனிய நிலையில் உள்ளனர். சோறு, அதன் கறியைப் பற்றியும், உடுப்பைப் பற்றியும், மலிவு விலைப் பட்டியலைப்பற்றியும்,.. .. என எண்ணற்ற விடயத்தை உப்புச் சப்பின்றி கதைக்கும் பெற்றோர் உலகில் என்ன நடக்கிறது என்பதைப்பற்றி தெரியாது உள்ளனர்.

தமக்கு எதிராக இந்த நாடுகளில் உருவாக்கிவரும் சட்டங்கள், புதிய ஒடுக்கு முறைகளைப் பற்றியும் தெரியாது உள்ளனர். இந்த நிலையில் தான் குழந்தைகள் ஏன் தமிழ் கற்க வேண்டும் என்ற கேள்வியை அவர்கள் முன் கேட்க வேண்டி உள்ளது. இந்த கேள்விக்கான பதிலை தமிழ் மொழிக் கல்விக் கூடாக சொல்லாத வரை குழந்தையோ, பெற்றோரோ தமிழ் கல்வி மீதான தேவையான ஆர்வத்தைப் பெற முடியாது.

இந்த நிலையில் பாப்பா பாரதி ஒளிநாடாமீதான விவாதத்தை தொட்டு ஆராய முயல்கிறேன். இவ்வொளிநாடா தமிழ் மொழிக் கல்வியின் ஒரு அங்கமாகக் கருதி வெளியிட்டதாக குறிப்பிட்டனர். இது எந்தளவுக்கு அவர்களுக்கு வெற்றி அளித்துள்ளது என ஆராயின்:

1) தமிழ் கல்வி கற்பித்தல் என்பதை வெளிவந்த இரு நாடாக்களும் சாதிக்க வில்லை.

2) தமிழ் கல்வி மூலம் ஏதாவது ஒரு அறிவைக் கொடுத்ததா எனின் இல்லை என்பது முக்கியமானது.

இதை நான் விரிவாக ஆராயின், இந்நாடாக்கள் மூலம் ஒரு குழந்தை சில சொற்களைப் தெரிந்து கொள்கிறது என்பது உண்மையே. அதன் அர்த்தம் தெரிந்தும், தெரியாமல் கூட அதைப் பெறுவது என்பது தமிழ் கல்வியை வளர்க்கும் ஒரு பணியில், முயற்சியில் ஒரு வளர்ச்சியாகி விடாது. ஒரு பாட்டை, கதையை தெரிந்து கொண்டால் மாத்திரம் தமிழ் கற்றதாகிவிடாது. இதற்கு உதாரணமாக லண்டனில் உள்ள தமிழ் தெரியாத சில தமிழ் குழந்தைகள் கர்நாடக சங்கீதத்தை ஆங்கிலத்தில் எழுதி அதைப் படித்து சித்தியடைவது போல் நடந்து விடும். அவர்கள் கர்நாடக சங்கீதத்தை சரியாகப் புரிந்தோ அல்லது அதன் உள் அர்த்தத்தை புரிந்தோ சித்தியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் ஒரு பக்கத்தில் எமது குழந்தைகள் தமிழ் ஆர்வம் இருக்கிறதோ, இல்லையோ தமிழ் சினிமாப் பாடல்களை பாடுகின்றனர். அந்த சொற்களில் சில அர்த்தங்கள் தெரிந்தும், தெரியாத வகையில் அந்தப் பாடல்களை தெரிந்து கொள்கின்றனர்.

இங்கு ஒரு குழந்தை, ஒரு பாடலை, கதையை ரசிக்கின்றது, விரும்புகின்றது என்பது தமிழை கற்க விரும்புகிறது என்று யாரும் கருதி முயற்சி எடுப்பின் அது ஒரு பொய்ப் படமாகவே அது இருக்கும்.

புலிகளின்பாடல் அவர்களின் ஆதரவாளர்களின் குழந்தைகள் பல மேடைகளில் பாடுகின்றனர், புலி மாமா பற்றி கதை எழுதுகின்றனர். இது அதன் அர்த்தத்தை முழுமையாகப் புரிந்து சொன்னார்களா? என ஆராயின் சினிமாப் பாடல் போல் மாறிவிடுகிறது.

ஆர்வம், விருப்பு என்பது வேவ்வேறு நோக்கத்தைக் கொண்டது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மீதான ஆர்வம் என்பது அதை ஏன் கற்க வேண்டும் என்ற ஒரே விடையில் மட்டுமே ஏற்பட முடியும். இந்த விவாதத்தில் பாப்பா பாரதி சார்பாக கலந்து கொண்ட மாவை நித்தி குறிப்பிடும் போது தனக்கு ஏன் அந்த ஆவம் ஏற்பட்டது என்றால் எனது சுய அடையாளத்தை தேடுவதில் இருந்து. அதாவது நான் யார்? என்ற கேள்வியில் இருந்து என்கின்றார்.

இது மிகச் சரியானதாகும். அவர் இந்தக் கேள்வி மீதான அடிப்படைதான தமிழ் கல்வியை வளர்க்க முன்வந்ததாகும். ஆனால் இது அக் குழந்தைகளுக்கு உண்டா? அல்லது இதில் ஈடுபட முனையும் பெற்றோருக்கும், குழந்தைகளுக்கும் உண்டா? எனின் 99வீதம் இல்லை என்பதே பதிலாகும். இதற்கு ஆய்வு தேவையில்லை

அடுத்து தமிழ் கல்வி மூலம் அறிவைப் புகட்டுவதாக இந்நாடாவைக் கொண்டு கூற முடியாது. கல்வி புகட்டுவதற்கு இந்த மேற்கு நாட்டுக் கல்விக்கு மேம்பட இந்நாடா பங்கு ஆற்றவில்லை.

இந்த விடையத்துக்கு அப்பால் ஒளி நாடா சரி, நோர்வே ஒலிநாடா சரி பெற்றோராகிய எங்கள் நிலையில் நின்று கொண்டு, பிள்ளையின் சூழலைப் புரிந்து கொண்டு பங்காற்றுவதில் தவறிழைத்துள்ளது.

உதாரணமாக கழுதைமீது போகும் கதை, பேய் கதை போன்றன குழந்தைக்கு அன்னியமானது. மாட்டு வண்டியே இல்லாத நாட்டில் மாட்டு வண்டியைப் பற்றி பாடல், கதை அன்னியப்பட்டதாகும். அதைச் சொல்லுவதாயின் அந்தச் சூழலை புரியவைக்க வேண்டும். இது ஏன் தமிழ் கற்பித்தல் என்ற கேள்விக்குள் அடங்கியிருக்கிறது.

தமிழை எப்படிப் புகட்டலாம் அறிவை எப்படிப் புகட்டலாம் என்ற கேள்வி எழுவது இயல்பானது. எப்படி அந்தச் சூழலுடன் எம் சூழலை இணைக்கலாம் என்ற கேள்வி எழுவது, எம்மை (பேற்றோரை) நோக்கி கேட்பது இயல்பானதே.

இங்குதான் சமுதாயத்தில் அக்கறைக்குரியவர்களது குழந்தையின் வளர்ச்சியில் அக்கறையாக வழிகாட்ட முயல்பவர்களை தேடிக் கண்டு பிடிக்க வேண்டியது அவசியமாகிறது. உதாரணமாக 2 முதல் 15 வயது குழந்தை ஒன்று, உங்களுடன் வரும் போது வீதியில் காணும் பல விடையங்களை சுட்டிக் காட்டி உங்களிடம் ஏன் என்ற கேள்வியை முன்வைக்கிறது. உதாரணமாகப் பார்ப்பின் பொலீஸ் ஒரு வெளிநாட்டவரை கைது செய்யும் போது, அக்குழந்தை ஏன் எனக் கேட்கிறது. வெளிநாட்டவர் மணிக்கணக்காக பொலீஸ் நிலையத்தில் தூங்கும் போது அல்லது அலக்கழியும் போது ஏன் எனக் கேட்கிறது. கடைக் கண்ணாடியில்

காணும் எல்லாப் பொருட்களையும் வாங்கித் தரக்கோருகின்றது. சிறுவர் உழைப்பைத் தொலைக்காட்சியில் காணும் குழந்தை ஏன் வேலை செய்ய வேண்டும், ஏன் உணவு இல்லை,......... என கேட்கிறது.

நாம் ஏன் இலங்கைக்கு போக முடியாது, ஏன் இலங்கையில் சண்டை, ஏன் சாகிறார்கள் எனக் கேட்கிறது.


பணக்கார நாட்டில் வீட்டுக்கு வீடு கார் உள்ள போது, ஏன் அங்கே மாட்டு வண்டி செல்கிறது, கார் ஏன் அங்கில்லை என்கிறது.

ஏன் நான் கறுப்பு, ஏன் அவர்கள் வெள்ளை, ஏன் அவர்களைப் போல் நான் இல்லை, ஏன் நான் கறுப்பு அவர்களுடன் இணைந்து சுறுசுறுப்பாக விளையாடக் கூடாது, ..... ஏன் நாளாந்த வாழ்கையில் உங்கள் குழந்தையின் கேள்விகள் பலவாகின்றன. நாட்டுக்கு நாடு இது பல கோணத்திலும் சில வேறுபாட்டாலும், இதற்கான விடைகள் பெற்றோருக்கே தெரியாது நிலையிலும் பலர் காணப்படுகின்றனர். ஏன் எனின் பெற்றோருக்கு தமிழ் ஏன் கற்க வேண்டும் என்ற கேள்விக்கு பதில் தெரியாத சமூகக் காரணமாகும்.

என்ன கல்வி கற்பிப்பது என்பதை பிள்ளையின் உளவியல் கேள்வியில் இருந்து ஆராய்வது அவசியமாகும். பிள்ளை எதை முரண்பாடாகக் காண்கின்றதோ, எதைத் தெரிந்து கொள்ள முடியாது சூனியமாக இருக்கின்றதோ அதன் மீதான கதை, பாடல்கள் தான் பிள்ளைகளின் ஆர்வத்தைத் தூண்டும். அறிவைப் புகட்டுவது என்பது எம் சூழலில் புலப்படுவது என்பது இன்னுமொரு புறமான விடையமாகிறது.

உதாரணமாக அண்மைக் காலங்களில் குழந்தை உழைப்புப் பற்றி பல பாடசாலைகளில் கூறப்பட்டது. தொலைக்காட்சி காட்டூண் முதல் பலவழிகளில் புகட்டியது. ஆனால் இந்த வழிகள் ஒரு பக்கமானவை. ஒரு கூர்மையான சமூக ஆய்வின் அதன் முற்பக்கத்தைக் கூறும் பொது குழந்தை அதை நோக்கி ஆவலத்தைத் தூண்டுகிறது. அப்போது எல்லா சராசரிக் குழந்தையை விட அறிவியல் ரீதியில் முன்னணிக்கு வருகிறது. இது தான் அறிவியல் ரீதியில் குழந்தைக்குப் புகட்டும் கல்வியாகும்.

மனிதன் குரங்கில் இருந்து தோன்றினான் என்ற செய்தியை ஒரு தொலைக்காட்சி செய்தி ஊடாக தமிழில் புகட்டும் போது அது வழக்கமான சலிப்பூட்டுவதற்குப் பதில் அதன் மீதான முரண்பாட்டை இனங்காட்ட வேண்டும். இந்த குழந்தையின் பெற்றோர் தாம் கற்கும் போது நிராகரிக்கப்பட்டதை, மதப்பிரிவுகள் நிராகரித்ததையும், அவர்கள் முன்பு இதற்கு எதிராக செய்த அழிவுகளையும் இனங்காட்ட வேண்டும். இது அக்குழந்தைக்கு புதிய விடயமாக தமிழ் கற்கும் அறிவைத் தூண்டுகிறது.




பூமி உருண்டை என்று சொல்லும் ஒரு கதையைத் தயாரிக்கும் போது அதை மறுத்தவர்கள் செய்த அட்டகாசத்தை ஒரு சிறு கதையாக நடித்த படி கூறலாம். அந்த உண்மை மீதான வன்முறையையும் இனங்காட்டுவது என்பது குழந்தைக்கு புதிய விடையமாகும். இந்த சமூக அமைப்பால் கொடுக்கப்படாத விடையம் இயல்பில் குழந்தை அதன் மீது ஆர்வமாகிறது. அதைத் தேடத் தொடங்குகிறது.

அமெரிக்காவைக் கண்டு பிடித்த கதையைப் பற்றி கூறும் போது அல்லது அவுஸ்ரேலியா உருவான வெள்ளையர் கதையைக் கூறும் போது, இலங்கைகைப் கைப்பற்றிய பிரிட்டிஸாரைப் பற்றி கூறும் போது, தமிழ் மக்கள் மீது நிகழ்ந்து சிங்களபேரினவாத ஆக்கிரமிப்பைப் பற்றி கூறும் போது அங்கு இருந்த எதிர்ப் பக்கம் பற்றிய கூற்று குழந்தைக்கு தெரியாத ஒரு புதிய புதிரான விடையமாகும். அப்போது குழந்தை அதை ஆராய முற்படுகிறது. இதுதான் அறிவியல் இது பெற்றோரையும் அறிவியல் ரீதியில் உயர்த்தும்.

உதாரணமாக நாம் குழந்தையாக இருந்து போது எமது பெற்றோர்கள் எமது ஆசிரியர்களாள் கதைகள் கூறப்பட்டன. அதில் ஒரு சிலவற்றை எடுப்பின் குரு பக்தி பற்றி ஏகலைவன் துரோணர் கதை புகழ் பெற்றது. இந்தக் கதையை எமது குழந்தைக்கு எமது ஊர் கதையாக கூறும் போது அதுபற்றிய பல கேள்விகளை நாம் கேட்பது அவசியமாகும். ஏன் ஏகலைவன் தன் விரலை வெட்டியான் ஏன் துரோணர் வெட்டக் கோரினார் அதன் சமூக முரண்பாடு என்ன? ஏன் ஒரு வேடன் வில்வித்தையை கற்கக் கூடாது? அன்றிருந்த சமூக அவலத்தை நீதிக் கதையாக இணைப்பது இன்று அவசியமா? இவ்வாறான கேள்விகள் அக்குழந்தையின் அறிவை உயர்த்துகின்றதுடன் பெற்றோரின் அறிவையும் உயர்த்துகின்றது.

நந்தனார் கதையை அடிக்கடி கோவில்களில் கேட்டுள்ளோம். நந்தனார் தில்லையில் யோதியில் (நெருப்பில்) கலந்தார் என்கின்றது கதை. யார் நெருப்பு வைத்தார், ஏன் நெருப்பு வைத்தனர்? அந்தச் சமூக ஏற்றத் தாழ்வு தான் என்ன? ஏன் நந்தனார் கோவிலுக்குப் போகக் கூடாது? என்ற கேள்வி அறிவை விழிப்புற வைக்கும். இது எமது சிறுகதை இதை விழிப்புணர்வு மிக்க சிறுகதையாக நாம் மாற்ற வேண்டும்.

இப்படி நிறையவே கூற முடியும். நாம் கேட்டவைகள் கேட்காதவைகளை விட குழந்தை கேட்கப் போவது, கேட்பது அதிகமானது. ஏன்? என்ற கேள்வி அதிகமாக எழுகின்றது. ஏனெனில் எங்களைவிட அடுத்த தலைமுறை

முன்னேறியே இருக்கும்.

பிள்ளை இந்த சமூகத்தில் எதைத் தெரிந்து கொள்ள முடியாது உள்ளதோ அதை முன்வைப்பது பெற்றோருக்கம் பிள்ளைகளுக்கும் அதிக ஆர்வத்தை தூண்டும். இது தமிழில் நடக்கும் போது அது மேலும் ஆர்வத்தை தமிழின் பக்கம் தூண்டும்.

நாம் இங்கு இரண்டாந்தரப் பிரஜையாக நடத்தப்படுவதைப் புரிந்து கொள்வதும், அதைப் பிள்ளைக்கு புரிய வைப்பதும், அதைத் தமிழ் மூலம் சாதிக்க முற்படவேண்டும். அது, இயல்பில் தமிழ் என்ற சோந்த அடையாளத்தை நோக்கி தேடுதலாக அமையும்.

இரண்டாந்தர பிரஜை என்பதைச் சொல்லாத நிலையில் குழந்தை அதைத் தெரிந்து கொள்ளாத நிலையில் அக்குழந்தை வளர்ந்து வரும் போது இயல்பில் அதை அடையாளங் காண்கின்றது. இப்படிக் காண்கின்ற போது சொந்த அடையாளாத்தின் மீதான தெளிவு இல்லாது இருப்பதொன்பது அக்குழந்தை இயல்பில் சமூக நிலையில் இருந்து விலகிய ஒரு வன்முறைக் கும்பலாக, லுப்பன்களாக மாறுவர். ஏன் எனில் ஒடுக்குமுறை என்ற கோரமுகம் இந்த சமூகம் மீது வெறுப்பை கொடுக்கின்றது. அதே நேரம் பெற்றோர் இதை மறுக்கும் பொது அல்லது சொந்த அடையாளத்தை தொலைத்து நிற்கம் போது குழந்தை பெற்றோரிடம் இருந்து விலகிவிடுகிறது.

அக்குழந்தை இச்சமூகத்தில் இருந்து விலகி வன்முறையைத் தீர்வாக முன்வைக்கிறது. சமூகப் பார்வை அற்ற இப்போக்கு மீள முடியாத மக்களுக்கு எதிரான, அரசுக்கு எதிரான ஒரு வடிவமாக மாறுகிறது. இதற்கு பிரான்ஸ், அமெரிக்கா, ஜேர்மன், ......... என பலநாடுகளில் உள்ள வெளிநாட்டுக் குழந்தைகள் எடுத்துக் காட்டாக உள்ளனர். பெற்றோர் அடங்கிப் போன அரசு ஊழியர்களாக இருக்க குழந்தைகள் வன்முறை கொண்டோராக எல்லாவற்றையும் எதிர்க்கும் அடுத்த எல்லையில் உள்ளனார்.

ஒரு குழந்தையின் சமூகப் பற்று என்பது சுய அடையாளத்துடன் கூடிய தேடுதல் என்பதுதான். நான் என் இரண்டாந்தரப் பிரஜையாக நடத்துப்படுகின்றேன் என்ற கேள்விக்கு விடை அளிக்கின்றது அந்த சமூகக் கண்டு பிடிப்பு ஊடாக இரண்டாந்தரப் பிரஜை என்பதை இல்லாது ஒழிக்க ஒரு மாற்று வழியைக் காண்கின்றது. நான் இரண்டாந்தரப் பிரஜை என்பதை இனம் கண்டு கொள்ள தமிழ் தெரிவதன் ஊடாக தமது சுய அடையாளத்தைத் தேடுதல் என்பது இலகுவாகிறது.

இந்நிலையில் சிலர் இதையும் சில வழமையான சில செய்திகளையும் சேர்த்து கொடுக்கலாம் என்ற கருத்து உண்டு. அப்படிப் பார்த்தால் சினிமாப் பாடலையும் கூட சேர்க்கலாம். ஒரு விடையத்தைச் சேர்க்கும் போது ஏன் எதற்கு என்ற கேள்வி முக்கியமானது. ஒரு செய்தி செல்லும் பொது அது எதைச் சாதிக்கிறது என்பது முக்கியம். ஒரு பாடல் ஒரு கதை வெறும் புலம்பலல்ல. அதைக் கொடுக்கும் போது சமூகத்தில் குழந்தை கற்றுக் கொள்ள, தெரியாத ஒரு புதிய விடையத்தை அறிந்து கொள்ள என பல துறைகளை உள்ளடக்கி இருக்க வேண்டும்.

தமிழ் சினிமாப் பாடல் போல, குப்பை தமிழ் வெளியீடு போல சம்பந்தம் இல்லாத வார்த்தைப் பிரயோகங்களைத் தவிர்ப்பது அவசியம். ஏதோ ஒன்றைச் சொல்லும் போது அது அக்குழந்தைக்கு அறிவையும், தமிழ் கல்வியையும் இணைத்துச் செல்ல வேண்டும்.

எனது சுய கடமை என்ன? நான் யார்? என்ற கேள்வியை உள்ளடக்கிய , ஏன் தமிழைக் கற்க வேண்டும் என்ற தெளிவைப் புகட்டக் கூடிய வகையில் தமிழ் கல்வி புகட்டப்படுவது இன்று அவசரமான எம்முன் உள்ள பணியாகும். அது இல்லாத வரைக்கும், அது வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் அதன் உயிர்வாழ்வு முடிந்து விடும் என்பதைக் கவனத்தில் எடுப்பது மிக அவசியம். இறுதியாக நாம் உங்கள் முன் விளங்கப் படுத்திய விடையத்தை ஒரு தத்துவமாக அல்லது இது தேவை இல்லை என்று பொதுவாகக் கூறும் தலைமுறைக்கு சிலவற்றைக் கூறுவது அவசியமாகிறது.

இந்து நூற்றாண்டின் ஆரம்பத்தில் அல்லது எமக்கு முந்திய தலைமுறையின் கல்வியை எடுப்பின் அது ஐரோப்பாவாக இருந்தாலும் சரி எம் நாடாக இருந்தாலும் சரி அங்கு கல்வி என்பது மதம் சார்ந்ததாகவே இருந்தது. இதை எதிர்த்து அக்காலத்தில் ஆய்வாளர்கள் போராடிய அதே நேரம் விஞ்ஞானக் கல்வியை புகுத்த முனைந்தனர். அப்போது பலர் அதை எதிர்த்தனர். சிலர் அதையும் இதையும் சேர்க்கக் கொரினர். ஆனால் இறுதியில் முழுக்க முழுக்க கால ஓட்டத்தில் விஞ்ஞானக் கல்வி புகுத்தப்பட்டது. இன்று இந்தக் கல்விக்கு சமூக விஞ்ஞானக் கல்வியைப் புகுத்தும் போது இந்தத் தலைமுறை அதே பாணியில் எதிர்க்கின்றது. ஆனால் அடுத்து தலைமுறைக்கு, சமூக விஞ்ஞானத்தை தமது கல்வியாக புகுத்தாவிட்டால் மனித இனமே வாழ முடியாது அழியும்.

எப்படியும் விஞ்ஞானம் இன்றி இன்று வாழ முடியாது ஆகவே நாம் அதை எம்சிறுவர்களுக்கு இன்றே புகுத்துவது உடனடிப் பணி என்பதை சென்ற தலைமுறை கல்வியுடன் ஒப்புட்டுப் புரிந்து கொள்வது அவசியம். நாம் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் மனிதனை சிந்திக்கும் வகையில் சொல்லப்பட வேண்டும் என்பது அடிப்படை இதைப் புரிந்து கொள்வது பெற்றோரினதும், கற்பிப்பவர்களினது உடனடித் தேவையாக உள்ளது. இக்கட்டுரை தொடர்பான விமர்சனத்தையும் கருத்துக்களையும் நான் வரவேற்கிறேன்

இன்றைய அரசியல் நிலைகருதியும், யுத்தத்திற்கு முக்கிய பங்கை வகிக்கும் இராணுவத்தின் நிலைகருதியும், 1984 பிற்பகுதியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அராஜக நடவடிக்கையினால் அதனுடன் முரண்பட்டு பிரிந்து சென்று தீப்பொறி என்ற அமைப்பை உருவாக்கி அதன் மூலம் மக்களுக்கு தம்மை அறிமுகப்படுத்தி 1985களில் அன்றைய நிலையில் புரட்சிகர இராணுவம் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற நோக்கில் வெளியிடப்பட்ட அரசியலும் இராணுவம் என்ற புத்தகத்தினை மீள்பிரசுரம் செய்கின்றோம் இப்புத்தகத்துடன் முற்று முழுதான உடன்பாடு இல்லாத போதிலும் இன்று இதனடிப்படையில் இராணுவ அமைப்புபற்றி விவாதத்தை உருவாக்க உதவியாக இருக்கும் எனக் கருதுகின்றோம். அதேவேளை இது ஓர் அமைப்புக்கான நிலையில் இருந்து எழுதப்பட்டது. நாம் விவாதிக்கும் போது அவ்வமைப்பின் நிலையில் இருந்து விவாதிக்காது, (கருத்தை மையமாக) புதிய அமைப்பின் இராணுவ, யுத்த தந்திரத்தினை வகுக்கம் பொருட்டு விவாதிப்பது எம்மை ஒரு முன்னேறிய நிலைக்கு கொண்டு செல்லும் என்பது எமது கருத்து. (இப்புத்தகத்தின் முன்னுரையைத் தவிர்த்து இங்கு தருகிறோம்.)

# அரசியலும் இராணுவமும்.

அரசியலுக்கும், இராணுவத்திற்கும் இடையிலுள்ள பரஸ்பர தொடர்பு பற்றிய பிரச்சனை புரட்சியாளர்கள் மத்தியில் என்றோ தீர்த்து வைக்கப்பட்ட பிரச்சனைதான். ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்று பூதாகாரமாகக் கிளம்பியிருக்கம் பிரச்சனைகளைப் பார்க்கும் போது தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்த வரையில் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படாமலே இருப்பது மட்டுமல்ல பல தப்பான கண்ணோட்டங்களையும் கொண்டிருப்பது புலனாகிறது. இந்தப் பிரச்சனையை தமிழீழ யதார்த்த சூழ்நிலையில் தீர்த்து வைப்பது மிக முக்கிய தேவையாகும்.

இங்கு நாம் ஒரு அப்பட்டமான கேள்வியை எழுப்புவோம். கெரில்லாக் குழுக்களுக்கும் கொள்ளையர் கோஷ்டிகளுக்கம் இடையில் உள்ள வேறுபாடு என்ன?

கெரில்லாக்கள் அரச வங்கிகளைப் பறிமுதல் செய்கிறார்கள். கொள்ளையரும், கொள்ளையில் ஈடுபட்டவர்களும் தம்மை வேட்டையாட வரும் அரச படைகளை கெரில்லாக்கள் மறைந்திருந்து தாக்குகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் கொள்ளையரும் இதே தந்திரோபாயங்களை பாவிக்கிறார்கள். தம்மை உளவறிய முற்படும் புலனாய்வுத் துறையினரை கெரில்லாக்கள் களையெடுப்பது போன்றே கொள்ளையரும் செய்கிறார்கள். தங்களைக் காட்டிக் கொடுப்பவர்களை பழி வாங்குகிறார்கள். தாக்குதல் தந்திரோபாயங்கள் கூட ஒத்தவையாக இருக்கின்றன. நடைமுறை வேலையில் உள்ள ஒற்றுமை போன்றே தாபன அமைப்பு வடிவத்திலும் கொள்ளையர் கோஷ்டிகள் கெரில்லாக் குழுக்களை பெருமளவில் ஒத்துள்ளன. நிரந்தர இராணுவத்தைப் போலல்லாது குறிப்பிட்ட ஒருவரின் தலைமைக்குக்கட்டுப்பட்ட சிறிய குழுக்களாக அமைதல், தமது செயற்பாடுகளில் அதிகம் வளைந்து கொடுக்கம் தன்மையுடைய ஸ்தாபன வடிவம் போன்றவற்றிலும் கெரில்லாக் குழுக்களும் கொள்ளைக் கோஷ்டியும் ஒத்தவையே.

அப்படியானால் கெரில்லாக் குழுக்களுக்கும் கொள்ளைக் கோஷ்டிகளுக்கும் வேறுபாடே கிடையாதா? கொள்ளைக் கோஷ்டிகள் குறுகிய காலத்தினுள் பொலீசாரால் அழிக்கப்படும் அதே வேளை ஆரம்பத்தில் சிறியதாக இருக்கும் கெரில்லாக் குழுக்கள் அரசின் வேட்டையாடலுக்குத் தப்பி வாழ்ந்து படிப்படியாக வளர்ந்து ஈற்றில் அந்தநாடு முழுவதையும் கைப்பற்றி ஆட்சி அதிகாரத்தை நிலை நிறுத்துகின்றனவே! இதனை எவ்வாறு விளக்குவது என்று கேள்வி எழுவது இயல்பானதே.

கெரில்லாக் குழுக்களை கொள்ளைக் கோஷ்டியில் இருந்து வேறுபடுத்தும் அடிப்படையான, தீர்க்கமான அம்சம் அரசியலே கெரில்லாக்களின் அரசியல் நோக்கே அவர்களை மக்களின் நலன்களை முன்னெடுப்பவர்களாக ஆக்குகிறது. இதனால் மக்களின் அபிமானத்தையும் ஆதரவையும் பெறுகின்றார்கள். மக்களை அணிதிரட்டிப் போராட வைத்து இறுதி வெற்றி அடைகிறார்கள். ஆனால் கொள்ளைக் கோஷ்டிகள் அரசியல் நோக்கமற்ற தன்மையால் மக்களின் நலன்களுக்கு விரோதமாக செயற்படுகிறார்கள். மக்களது வெறுப்பிற்கும் கோபத்திற்கும் ஆளாகின்றார்கள். இக்கோபமே இறுதியில் கொள்ளைக் கோஷ்டிகளை அழித்தொழிக்கின்றது. ஆகவே கெரில்லாக் குழுவை கொள்ளைக் கோஷ்டியில் இருந்து வேறுபடுத்தும், அவர்களது வெற்றி வழிக்கும் தீர்க்கமான அம்சம் அரசியலே.

## அரசியல் என்றால் என்ன?

இதுபற்றி இரண்டு விதமான பார்வைகள் எமது போராட்டத்தில் காணப்படுகிறது. முதலாவது, அரசியல் என்பதை வெறும் பாராளுமன்ற வாதமாகப் பார்க்கும் போக்கு. இவர்களைப் பொறுத்தவரையில் அரசியல் என்பது கூட்டங்களைக் கூட்டுவது கோசங்களைப் போடுவது, தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றம் செல்வதுமே எனக்கருதுகின்றார்கள். கடந்த காலத்தில் பாராளுமன்றப் பாதையில் ஏற்பட்ட தோல்விகளையும், பாராளு மன்றத் தோல்விகளையும்

காணும் இவர்கள் அரசியல் என்பதே ஒரு மோசமான செயலாகுமென்று கருதுகிறார்கள். ஆயுதமேந்திப் போராட வக்கற்வர்கள், சோம்பேறிகளின் காகிதப் போராட்டமே அரசியல் எனக் கருதி ஒதுக்கிறார்கள். இதனால் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஆயதம் ஏந்திப் போராடுவதை மட்டுமே தொழிலாகக் கொண்ட «சுத்த இராணுவத்தை» கொண்டு வர முயலுகின்றார்கள். இராணுவத்திலுள்ள ஊழியர்கள் அரசியலைக் கற்றுக் கொள்வது, அரசியலைக் கோருவது, தமது ஸ்தாபனத் தலைமைகளை அரசியல் ரீதியில் விமர்சிப்பது இவை அனைத்துமே மன்னிக்க முடியாத குற்றங்களாகின்றன.

இரண்டாவது போக்கு அரசியல் என்பது வெறும் பிரச்சாரமே எனக் கருதுவதாகும். இவர்கள் தாங்கள் சரியாயும், தவறாயும் செய்யும் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதே அரசியல் எனக் கருதுகிறார்கள். தாங்கள் தாபனத்தில் உள்ள நோயுற்றோர், பயந்தவர், இராணுவ நடவடிக்கைகளுக்கு உதவாதோர்களை திரட்டி சிலசுலோகங்களைக் கற்பித்து, பத்திரிகை வெளியீடுகளை அவர்களது ஸ்தாபன நடைவடிக்கைகளின் செயல்வாக்கு செலுத்த இயலாத கூலி எழுத்தாளர்களை வைத்து எழுதி தங்களை சிறந்த அரசியல் விற்பனர்களாக மக்கள் மத்தியில் காட்ட முனைகின்றார்கள். பிறரால் எழுதப்பட்ட அறிக்கைகளை தங்களது பெயரால் வெளியிட்டும், தமது புகைப்படங்களை வேறு கோணத்தில் வெளியிட்டும் தங்களை லெனின், மாவோ, சேகுவரா, கோசிமின் போன்ற தலைவர்களை ஒத்தவர்களாகக் காட்ட முனைகிறார்கள். தாங்கள் செய்யும் பொறுப்பற்ற, தவறான செயல்களை மக்களுக்கு இந்தத் தலைவர்களின் மேற்கோள்களை– அவற்றின் இடம், பொருள், ஏவல் ஆகியவற்றைக் கருத்திற்கொடாது– காட்டி நியாயப் படுத்துகிறார்கள். ஆனால் உண்மையிலேயே அரசியல் என்பது குறிப்பிட்ட ஒரு மனித குழுவின் பொருளாதாய (MATERIAL – லௌதீக) நலன்களைத் திரட்டியே ஆகும். இந்த மனிதக் குழுவின் அலகு வர்க்கமாக இருக்கையில் வர்க்க அரசியலாகவும், தேச மக்களை உள்ளடக்குகையில் தேசியமாகவும், உலகெங்கும் உள்ள பரந்து பட்ட மக்களைக் கருதும் போது சர்வதேசியமும் ஆகிறது.

சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் ஒவ்வொரு சமூகப் பிரிவுகளும், வர்க்கங்களும் தத்தமக்கே உரிய பொருளாதாய நலன்களைக் கொண்டுள்ளன. இது அந்தச் சமூகப்பிரிவுகளின் அரசியலாகிறது. தத்தமது பொருளாதாய நலன்களை வென்றெடுப்பதற்காக காப்பதற்காக அந்தச் சமூகப் பிரிவுகள், வர்க்கங்கள் நடத்தும் போராட்டமே அந்தச் சமுதாயத்தில் நிகழும் அரசியல் போராட்டமாகிறது. ஆரம்பத்தில் இந்தப் போராட்டங்கள் அமைதியான வழிமுறைகளான மனுக் கொடுத்தல், பகிரங்க விவாதங்கள் பாராளுமன்றம், சத்தியாக் கிரகம், உண்ணாவிரதம், ஒத்துழையாமை, வரிகோடாமை, வேலை நிறுத்தம், மறியல் போராட்டம் போன்ற வடிவங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. இப்போராட்டங்கள் வளர்ச்சியடைய அடைய முரண்பாடுகள் கூர்மையடைய அடைய ஆளும் வர்க்கம் இப்போராட்டங்களைப் பலாத்காரத்தால் (போலீஸ், இராணுவத்தால்) அடக்க முற்படுகிறது. இவ்வாறு அமைதி வழிப் போராட்டங்களை ஆளும் கும்பல் பலாத்காரத்தால் நசுக்க முனையும் போது ஆளும் கும்பலின் அரசியலின் பின்னால் மறைந்திருந்த பலாத்காரத்தை போராடும் மக்கள் இனங்கண்டு அதனை தமது புரட்சிகர பலாத்காரத்தால் முகம் கொடுக்கிறார்கள். ஒரு புரட்சிகரப் போராட்டம் பின்வரும் காரணங்களால் புரட்சிகர பலாத்காரத்தை வேண்டி நிற்கிறது.

1) சுரண்டும் வர்க்கத்தின் பலாத்கார அடக்குமுறையின் எதிர்ப்பு வடிவமே புரட்சிகர பலாத்காரமாகும்.

2) புரட்சிகர நடவடிக்கையில் இலக்குகளான தனிச் சொத்துடமையை ஆதாரமாகக் கொண்ட உற்பத்தி உறவுகள், சுரண்டல், அரசியல் அதிகாரம் ஆகியன திட்டமான அரசியல் தாபன வடிவம் (அரசு–சட்டம்) பெற்றுள்ளன. இத்தாபனம் பலாத்கார வடிவங்களையே சார்ந்து நிற்கின்றது. சுரண்டப்படும் வர்க்கங்கள் அரசு என்னும் ஸ்தாபன வடிவம் பெற்று சுரண்டும் சக்திகளை தூக்கி எறிய வேண்டும் எனில் புரட்சிகர பலாத்காரத்தை பிரயோகிப்பது தவிர்க்க முடியாததாகின்றது.

3) புரட்சியின் பின்பு சுரண்டும் வர்க்கம் மீளாதிக்கம் பெறுவதை தவிர்க்கவும், மாறும் காலகட்டத்தை அமுல் செய்யவும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் எனும் வடிவத்தில் புரட்சிகர பலாத்காரம் தேவைப்படுகிறது.

இவ்வாறு ஆளும் கும்பலின் பலாத்கார அடக்குமுறையை போராடும் மக்கள் தமது புரட்சிகர பலாத்காரத்தால் முகம் கொடுக்கும் செயன் முறையே யுத்தம் ஆகிறது. அதாவது அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது. இந்த அர்த்தத்தில் யுத்தம் அரசியலாகவும் யுத்தம் தானே அரசியல் நடவடிக்கையாகவும் விளங்குகிறது. ஆதிப் பொதுவுடமை சமுதாயத்தில் யுத்தமானது அந்தந்த கணக்குழுக்களிடையிலான வேட்டையாடும் நிலத்திற்கான போட்டியின் வெளிப்பாடாகவே இருந்தது. பின்பு உற்பத்தி சாதனங்கள் வளர்ச்சி பெற்று உபரி தோன்றிய போது அடிமைகளின் உழைப்பு முக்கிய உற்பத்தி சக்தியானது. இதனால் அடிமைகளைப் பெறுவதற்காக யுத்தங்கள் நடத்தப்பட்டன. மகா அலேக்சாண்டர் மற்றும் ஆபிரிக்கா மீதான படையெடுப்புகள் இதன் பாற்பட்டவையே. அடிமை உடமைச் சமுதாயத்தில் அடிமைகளினதும் எஜமான்களினதும் முரண்பாடுகள்

அடிமைகளின் விடுதலைக்கான போராட்டங்களாக வெளிப்பட்டன. விடுதலைபெற்ற அடிமைகள் நிலவுடமைச் சமுதாயத்திற்கு வழி சமைத்தனர். நிலவுடமைச் சமூக அமைப்பினுள் கருக்கொண்ட முதலாளித்துவ சக்திகளினதும், பண்ணையடிமைகளினதும், நிலப்பிரபுத்துவத்துடனான அரசியல் முரண்பாடுகள் முதலாளித்துவப் புரட்சியாயின. முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் உருவான மூலப்பொருள், சந்தைகளுக்கான தேவைகள் நாடுபிடிக்கும் கொள்ளைக்கார காலனித்துவ யுத்தங்களைக் கொண்டு வந்தன. ஏகாதிபத்தியத்தின் தோற்றம் சந்தைகளின் மீள் பங்கீட்டைக் கோரியது. இது 1ம், 2ம் உலக யுத்தத்தை உருவாக்கியது. அடிமைப்படுத்தப்பட்ட காலனி மக்களுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் தேசிய விடுதலை யுத்தங்களை விளைவித்தன. ஓடுக்கப்படும் வர்க்கங்களினதும், ஒடுக்கும் வர்க்கங்களினதும் அரசியல் முரண்பாடுகள் வர்க்க விடுதலைக்கான யுத்தங்களாயின.

உலக வரலாற்றில் அரசியல் நோக்கமற்ற யுத்தங்கள் நடந்ததே கிடையாது. இவ்வாறு மனித குல வரலாறு முழுவதுமே மனித குழுக்களின் அரசியல் வெளிப்பாடுகளான யுத்தங்களால் நிறைந்திருப்பதை நாம் காணலாம். இதுனையே காரல் மாக்சும், ஏங்கல்சும் தமது புகள் பெற்ற «கம்யூனிச அறிக்கை» யில் «ஏடறிந்த மனித குல வரலாறு என்பது வர்க்கப் போராட்டங்களின் வரலாறே» என்றார்கள்.

## யுத்தத்தின் தன்மைகள்

யுத்தங்களை அநீதியான யுத்தங்கள், நீதியான யுத்தங்கள் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். ஒரு சிறு கும்பலின் நலனுக்காக பரந்து பட்ட மக்களை நசுக்கும், சுரண்டலையும் அடக்குமுறையையும் கட்டவிழ்த்து விடும் நோக்கம் கொண்ட கொள்ளைக்கார ஆக்கிரமிப்பு யுத்தங்கள் யாவும் அநீதியான யுத்தங்களாகும். அடக்கி ஒடுக்கப்படும் பரந்து பட்ட மக்களின் விமோசனத்திற்கு வழி காட்டும் சுரண்டலிலிருந்தும், அடக்கு முறையிலிருந்தும் மீட்சி பெறும் நோக்கம் கொண்ட யுத்தங்கள் யாவும் நீதியான யுத்தங்களாகும்.

வர்க்க முரண்பாடுகளும், சுரண்டலும் இந்த உலகில் உள்ளவரை முரண்பட்ட வர்க்கங்கள் தமது நலனுக்காக முட்டிமோதிக் கொள்வதும் அவை யுத்தங்களாக வெடிப்பதும் தவிர்க்க முடியாதவையே. நாம் அநீதியான யுத்தங்களை எதிர்க்கும் அதேவேளை நீதியான யுத்தங்களை ஆதரிக்கவும் அவற்றில் ஈடுபடுவதும் அவசியமானது. ஒடுக்குமுறை மிகுந்த வர்க்க சமுதாயத்தில் சமாதானம் என்பது நடைமுறையில் சுரண்டும் வர்க்கத்தின் அநீதியான யுத்தத்தை ஏற்றுக் கொள்ளல், அடங்கியிடுத்தல் என்று மட்டுமே அர்த்தப்படும். ஏனெனில் சுரண்டு அல்லது சுரண்டப்படு, கொல் அல்லது கொல்லப்படு என்பதே வர்க்க சமுதாயத்தின் விதியாகும். ஆகவே வர்க்க சமுதாயத்தில் சமாதானம், சமரசம் எனும் வார்த்தைகளின் பின்னால் உள்ள ஆளும் வர்க்கத்தின் கபடத்தனங்களை இனங்காணக் தவறக்கூடாது.

நாம் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தத்தை ஒழிப்பதற்காக போராடுபவர்கள். இதனை ஒழிப்பதற்கு ஒரே வழி யுத்தத்தை யுத்தத்தால் எதிர்ப்பது. ஏதிர்புரட்சிகர யுத்தத்தை புரட்சிகர யுத்தத்தால் எதிர்ப்பது. தேசிய எதிர்ப்பு யுத்தத்தை தேசிய புரட்சிகரயுத்தத்தால் எதிர்ப்பது மட்டுமே ஆகும். துப்பாக்கியை ஒழிப்பதானால் துப்பாக்கியை ஏந்துவது அவசியமானது.

மனித சமுதாயம் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்ட அரசுகள் ஒழிக்கப்பட்ட ஒரு கட்டத்திற்கு முன்னேறியதும் அங்கு எதுவித யுத்தங்களும் இருக்க மாட்டா, அநீதியான யுத்தங்களே நீதியான யுத்தங்களே இருக்க மாட்டா. இது மனிதகுலத்தின் நித்திய சமாதான சகாப்தமாக இருக்கும்.

## இராணுவம் :-

யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல், அரசியல் என்பது இரத்தம் சிந்தும் யுத்தம் என்பது உண்மை. ஆனால் யுத்தத்திற்கு அதற்கே உரிய விசேட குணாம்சங்கள் உண்டு. இந்த அர்த்தத்தில் யுத்தத்தை சாதாரன அரசியலுடன் சம்பந்தப்படுத்த முடியாது. விசேட நடவடிக்கைகள் மூலம் அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது. அரசியல் அதன் அமைதியான வழிகளில் முன்னேற முடியாத ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு வளர்ச்சி அடைந்ததும் அதன் பாதையிலுள்ள தடைகளை நீக்குவதற்காக யுத்தம் வெடிக்கிறது. யுத்தத்தில் குறிப்பான குணாதிசயங்களில் நின்றும் குறிப்பான ஸ்தாபன வடிவமும் – இராணுவம் குறிப்பான முறைகளில் தொகுப்பொன்றும் யுத்த தந்திரங்கள், நடைமுறைத் தந்திரங்கள் குறிப்பான ஒருவகைப் போருக்கும், தாக்குதலும் தற்காப்பும் – குறிப்பான வகை ஊழியரும் போர்வீரர் குறிப்பான வகை ஊழியர் பயிற்சி முறைகளும் – இராணுவப் பயிற்சிகள் – குறிப்பான ஸ்தாபனக் கட்டுப்பாடுகள் – இராணுவக் கட்டுப்பாடுகள் தோன்றுகின்றன.

எனவே யுத்த அனுபவம் குறிப்பான ஒருவகை அனுபவமாகும். யுத்தத்தில் பங்கு பற்றும் சகலரும் தங்கள் வழமையான பழக்க வழக்கங்களைக் கைவிட்டு தம்மை யுத்தத்திற்கு பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பின்பே அவர்களால் வெற்றி பெற முடியும்.

அரசு என்பது ஒரு வர்க்கம் இன்னோர் வர்க்கத்தை ஒடுக்குவதற்கான கருவியாகும். இந்த அரசின் பிரதான பகுதி இராணுவமாகும். எந்த வர்க்கத்தின் கையில் இந்த அரசியல் அதிகாரம் இருக்கின்றதோ அந்த வர்க்க நலன்களை அந்த அரசு காக்கும். ஆகவே யார் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பினாலும் அவர்கள்

பலமான படையொன்றினைக் கொண்டிருக்க வேண்டும். இதனையே «துப்பாக்கிக் குழலில் இருந்தே அரசியல் அதிகாரம் பிறக்கிறது» எனக் குறிப்பிட்டார் மாவோ. யாரிடம் படையுள்ளதோ அவரிடமே அரசியல் அதிகாரமும் உண்டு. மக்கள் படையென்று இல்லையேல் மக்களுக்கு என்று ஒன்றுமேயில்லை. ஆயுத சக்தியால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது யுத்தத்தால் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது புரட்சியின் கேந்திரக் கடமையும், அதன் அதியுயர் வடிவமுமாகும்.

## இராணுவத்தில் அரசியல்:-

யுத்தம் என்பது மனிதர் தம்மைத் தாமே பரஸ்பரம் வதை செய்து கொள்ளும் பிசாசு, ஈவிரக்கம் அற்றது. உயர்ந்த தியாகங்களையும் நீண்ட அர்ப்பணிப்புகளையும் விலையாகக் கொடுத்தே வெற்றி நிலை நாட்ட முடியும். யுத்தத்தின் அரசியல் தன்மை அது எப்படி நீதியானது என்பதையும் அதன் நோக்கங்களையும் அது தன்னுடையதும் அனைத்து மக்களினதும் விடிவுக்கு வழிவகுப்பதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளும் புரட்சிகர இராணுவ வீரன் «அனைத்து மக்களின் விமோசனத்திற்காகவே நான் போராடுகிறேன்" என்ற உணர்வைப் பெறுகிறான். இதுவே அவனது தியாகத்தினதும் வீரத்தினதும், போர்க் குணாம்சத்தினதும் உருக்குப் போன்ற சுயமான கட்டுப்பாடினதும் ஊற்று மூலமாகும்.

யுத்தத்தின் அரசியலைப் புரிந்து கொண்ட இராணுவமானது வீரர்களுக்கிடையிலும், வீரர்களுக்கும் அதிகாரிகளுக்குமிடையிலும், வீரர்களுக்கும் மக்களுக்குமிடையிலும் இறுக்கமான ஐக்கியத்தை பெற்றுக் கொள்கிறது.

அரசியல் மயமாக்கலானது வீரனின் உணர்வு பூர்வமான இயக்கப்பாத்திரத்தை உறுதி செய்கிறது. யுத்தத்தின் வெற்றியோ தோல்வியோ இருதரப்புக்களினது இராணுவ (வீரர்களின் எண்ணிக்கை, பெற்ற பயிற்சி, ஆயதங்களின்தரம்) அரசியல் பொருளாதார புவியியல் சூழ்நிலைகளாலும் ஒவ்வொரு தரப்பும் நடத்தும் யுத்தத்தின் இயல்பாலுவும், ஒவ்வொரு தரப்பும் கொண்டுள்ள சர்வதேச ஆதரவினாலும் நிர்ணயிக்கப்பாடுகின்றன என்பது உண்மை தான். ஆனால் அது இவற்றில் மட்டும் நிர்ணயிக்கப்படுவதில்லை. தம்மளவில் இவையாவும் வெற்றி அல்லது தோல்வியின் சாத்தியக் கூறை மட்டுமே தருகின்றன. வேற்றியோ தோல்வியோ முடிவாக்குவதில்லை. வெற்றி தோல்வியை முடிவாக்க மனிதனின் அகநிலைப்பட்ட பிரயாசையும் அதாவது யுத்தத்திற்கு வழிகாட்டுவதும், நடாத்துவதும், யுத்தத்தில் மனிதனின் உணர்வுபூர்வமான இயக்கப் பாத்திரம் சேரவேண்டும். இதுவே புரட்சிகர இராணுவத்தின் வெல்லற்கரிய தன்மையின் இரகசியமாகும். யுத்தத்தின் ஆயதங்கள் முக்கியமான அம்சம், ஆனால் தீர்க்கமான அம்சமல்ல. தீர்க்கமான அம்சம் மக்களே அன்றி பொருட்கள் அல்ல. புலப்போட்டி என்பது இராணுவ பலம், பொருளாதார பலம் இவற்றின் போட்டி மாத்திரமல்ல, மனிதபலம், ஆத்மீகபலம் இவற்றின் போட்டியுமாகும். இராணுவ, பொருளாதார பலங்கள் மக்களால் ஆக்கப்படுகின்றன.

யுத்தம் செய்ய வேண்டும் என்ற விருப்பத்திற்காக யுத்தத்தில் ஈடுபடுவதால் தோண்றும் மகிழ்ச்சிக்காக ஒருவரால் யுத்தத்தில் நீண்ட காலம் ஈடுபடமுடியாது. மாணவப் பருவத்தில் நுரைத்தெழும் வீரசாகச உணர்வுகள் பல இளைஞர்கள் இராணுவத்தின் பால் கவர்ந்திழுத்தலும், நீண்டதும், ஈவிரக்கமற்ற, விடாப்பிடியான யுத்தத்தில் இவர்களால் தாக்குப்பிடிக்க முடியாது. ஆரசியல் உணர்வில் இருந்து அந்நியப்பட்ட போராளிகளின் குழுக்கள் தமக்குள் சச்சரவிட்டும், ஊழல் படிந்தும் படிப்படியாக போர்குணாம்சத்தை இழந்தும் சமுதாயத்திற்கு ஒரு சுமையாகிறார்கள்.

முதலாளித்துவ சமுதாயத்தில் ஆளும் வர்க்கம் ஏனைய வர்க்கங்களை ஒடுக்குவதற்காக இராணுவத்தை கருவியாக பயன்படுத்துவார்கள். ஆயினும் இந்த இராணுவத்தில் பெரும்பாலானோர் ஒடுக்கப்படும் வர்க்கங்களின் அங்கத்தவர்களே. அதாவது சீருடையிலுள்ள விவசாயிகள் – தொழிலாளரின் பிள்ளைகளே. இவ்வாறே காலணியாதிக்க நாடுகள் தமக்குத் தேவையான துருப்புக்களின் பெரும் பகுதியை அந்தக் காலணித்துவ நாடுகளில் இருந்தே பெற்றுக் கொள்கிறார்கள். ஊதாரணமாக இந்தியாவில் பிரித்தானியர்கள் உள்ளூர் மக்களைக் கொண்ட படைகளை அமைத்து இரண்டாம் உலகமகாயுத்தத்திலும் பயன்படுத்தினார்கள்.

வறுமைகாரணமாக இதனை வயிற்றுப் பிழைப்பிற்கான ஒரு தொழிலாகக் கருதியும், அவர்கள் நடத்தும் யுத்தத்தின் அநீதியான தன்மையை உணராமலும் பல ஒடுக்கப்படும் வர்க்கத்தை, தேசத்தைச் சேர்ந்தவர்கள் இராணுவத்தில் சேருகிறார்கள். இவர்கள் கடுமையான இராணுவக் கட்டுப்பாட்டினாலும், ஆளும்வர்க்க, ஏகாதிபத்திய நலன்களைப் பேணும் உத்தியோகத்தர் தலைமையிலும் தம் சொந்த மக்களையே அடக்குவதற்கு பயன்படுத்துகிறார்கள். அந்த யுத்தத்தின் அரசியல் நோக்கங்களை, அநீதியான தன்மையை வீரர்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்பதற்காக அரசியலுக்கு அப்பாற்பட்ட யுத்தம் பற்றியும், அரசியல் கலக்காத இராணுவம் பற்றியும், கபடத்தனமாகக் கூறுகிறார்கள். பல சந்தர்ப்பங்களில் கட்டாயப்படுத்தி தமது சொந்த மக்களுக்கு எதிராகப் போரிடச் செய்கிறார்கள்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் பல ஆபிரிக்கர்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு யுத்த முனைக்கு

துருப்புகளாக அனுப்பப்பட்டார்கள் இந்த நிலையில் அவர்கள் யுத்தத்தில் ஈடுபட விரும்பாவிட்டாலும் தப்பி ஓட முடியாது. ஆகவே தமது உயிரைப் பாதுகாப்பதற்காகவாவது அந்த யுத்தத்தில் போரிட்டே ஆகவேண்டும். என்ற நிலையில் போரிட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். இவ்வாறே 1982ம் ஆண்டு லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தின் போது யுத்தத்தில் ஈடுபட்ட யுத்த விமானங்களின் ஓட்டிகள் தமது ஆசனங்களில் வைத்துப் பூட்டுக்களால் பூட்டப்பட்டிருந்தனர். வழமையாக யுத்தவிமான ஓட்டிகள் தமது விமானம் எதிரியினால் தாக்கப்பட்டு விட்டால் விமானத்திலிருந்து பரசூட் மூலம் குதிப்பதற்கு அனுமதிக்கப்படுவதுண்டு. ஏனெனில் விமானம் இழக்கப்பட்டாலும் போர் வீரனின் உயிராவது காப்பாற்றப் படலாம் என்ற எண்ணமே. ஆனால் இஸ்ரேல் தனது விமான ஓட்டிகளை தாக்குதலுக்குள்ளான விமானத்துடனேயே அழியுமாறு நிர்ப்பந்தித்தது. இந்த வாய்பை அளித்தால் தாக்காமலே குதித்து தப்பிவிடுவார்கள் எனக் கருதினார்கள். இவ்வாறு தனது துருப்புக்களை பலாத்காரமாக நிர்ப்பந்தித்து தனது மக்களுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபடுத்தும் அதேவேளை அந்த வீரர்களின் கவனங்களை திசை திருப்புவதற்காக இராணுவத்தில் மலிவான விலையில் புகைத்தல், மது, விபச்சாரம் போன்ற வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். யுத்தங்களின் போது ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் சூறையாடல்களில் ஈடுபடவும், பெண்களைப் பலாத்காரம் செய்யவும் அனுமதிக்கப்படுவார்கள். தமது யுத்தத்தின் சரியான தன்மையை உணருவதில் நின்று தவிர்க்கப்படுவார்கள்.

எனினும் இந்த இராணுவ வீரர்கள் யுத்தத்தின் அநீதியான தன்மை பற்றியும், அதன் அரசியல் நோக்கம் பற்றியும், தனது சொந்த மக்களுக்கு எதிராக பயன்படுத்துவதுமான போக்கை சரியாக இனங்காணும் போது அவர்கள் தமது மக்களுடன் சேர்ந்து முன்னாள் எஜமான்களுக்கெதிராக போரிடுவர். உலகப் புரட்சி வரலாற்றில் பலதடவை இது போன்ற சம்பவம் நேர்ந்துள்ளன. அடக்கு முறை இராணுவத்தில் உள்ள வீரர்களிடையே வீரர்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுதல், உயரதிகாரிகளின் மனித நேயமற்ற போக்குகள், வீரர்களை அடிமைகளாகக் கருதும் மனோபாவம், படு மோசமான தண்டனை முறைகள் போன்ற காரணங்களால் அடக்குமுறை இராணுவத்தினுள் அமைதியின்மை தோற்றுவித்து அவர்களது வர்க்க, தேசிய உணர்வுகளைத் தூண்டுகின்றன. தாம் நடத்தும் யுத்தத்தின் அரசியல் நோக்கங்களை காணுமாறு செய்கின்றன. இப்படிப்பட்ட அரசியலைப் புரிந்து கொண்ட இராணுவமானது போராட்டத்தில் ஈடுபடும் தமது சகோதர தொழிலாளர் விவசாயிகளை நசுக்குமாறு ஏவப்படும் போது தமது சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு எதிராக ஆயுதமேந்த வேண்டிய நிலை ஏற்படும் போது தமது நிலைப்பாட்டை உறுதியாக எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவர்களில் பெரும்பாலானோர் தமது நலன்கள் போராடும் பரந்து பட்ட மக்களின் நலன்களுடன் ஒன்று படுவதை காணும் போது அவர்கள் புரட்சியின் பால் தம்மை இணைத்தக் கொள்கிறார்கள். ரஷ்யப் புரட்சியின் பொது பல்லாயிரக்கணக்கான ஜாரின் துருப்புகள் புரட்சியின் பால் சேர்ந்தன. சீனாவிலும், வியட்நாமிலும், கியூபாவிலும், ஈரானிலும் இவை நடைபெற்றன.

அடக்குமுறை இராணுவத்தினுள் வீரர்களிடையே புரட்சிகர உணர்வுகளை ஏற்படுத்துவதை ஒவ்வொரு புரட்சிகர ஸ்தாபனங்களும் தமது வேலைத்திட்டங்களில் ஒன்றாகவே கொண்டுள்ளன. அவை பின்வருமாறு உள்ளடக்கின்றன.

1) மோதல்களில் இறந்த எதிரித் துருப்புக்களின் சடலங்களுக்கு உரிய மரியாதை செலுத்தல்.

2) காயப்பட்ட எதிரித் துருப்பினர்களுக்கு சாத்தியமானவரை மருந்திட்டு நல்ல முறையில் நடத்தி விடுதலை செய்தல்.

3) யுத்தத்தின் போது கைதானவர்கள், மோசமான குற்றங்களை கடந்த காலத்தில் செய்தவர்களாக உள்ள போது அவர்களை மரியாதையுடன் நடத்தி யுத்தத்தின் நோக்கங்களை அவர்களுக்கு விளக்கிக் கூறல், விரும்பியோரை புரட்சிகர அணியில் சேர்த்துக் கொள்ளல், ஏனையோரை போதனையின் பின் விடுதலை செய்தல்.

4) எதிரித் துருப்புக்களிடையே யுத்தத்தின் நோக்கம் பற்றிய பிரச்சாரங்களை பல வழிகளிலும் மேற்கொள்ளல்.

5) எதிரித் துருப்புகள் சரணடையும் பட்சத்தில் அவர்களது உயிர்களுக்க உத்தரவாதம் கொடுத்தல்.

இந்த செயன்முறைகள் இராணுவரீதியிலும் அதிகம் இலாபகரமானவை. ஏதிரித் துருப்புகள் புரட்சிப் படைகளை முகம் கொடுக்கும் போதெல்லாம் மோதலில் ஈடுபட்டு தமது உயிரைப் பணயம் வைப்பதிலும் பார்க்க சரணடைவது நன்றெனக் கருதும் போக்கு ஏற்படுகின்றது. இந்த மனோபாவம் ஆளும் கும்பலுக்கு அதிக கலக்கத்தை தொடுக்கவல்லது இதனை அவர்கள் புரட்சியாளர்களின் "சதிச்செயல்" என அழைப்பார்கள். இவ்விதமான சம்பவங்களை தவிர்ப்பதற்காகவே அரசியல் அற்ற இராணுவத்தை ஆளும் வர்க்கத்தினர் நிறுவமுயலுவர். முதலாளித்துவ இராணுவங்களில் காணப்படும் ஒழுக்கமின்மை தாழ்ந்த உணர்வுமட்டம், மக்களுக்கெதிரான அராஜகம் போன்றவற்றின் ஊற்று மூலமே இந்த கபடத்தனமான செயன்முறைகளே. புரட்சிகர இராணுவத்திற்கும் அடக்குமுறை இராணுவத்திற்கு இடையேயுள்ள

மிகஅடிப்படையான வேறுபாடே இராணுவத்தில் வீரர்களின் அரசியல் உணர்வே ஆகும்.

### கட்சியும் இராணுவமும்

புரட்சிகர கட்சியானது தனது அரசியலை முன்னெடுக்கும் பல்வேறுபட்ட வடிவங்களில் ஒன்றே யுத்தமாதலால் இராணுவமானது கட்சியின் கட்டளைக்குட்பட்டதாக, கட்சியின் வழிகாட்டலில் இயங்குவதாக இருக்க வேண்டும். முாறாக இராணுவம் கட்சியை கட்டுப்படுத்தும் நிலை தோண்றுமாயின் அது முழுப்போராட்டத்தையும் சீரழிக்கக் கூடியது. `அரசியலுக்கு அப்பாற்பட்ட இராணுவம்' என்னும் தன்மையே இதுவாகும். ஏனெனில் கட்சியானது பல வேறுபட்ட வெகுஜன தாபனங்களையும், தொழிற்சங்கங்களையும் வழிநடத்தி ஒருங்கிணைக்கும். கட்சியின் கட்டுப்பாட்டுக்குள் இல்லாத இராணுவம் கட்சி முன்னேடுக்கும் போராட்டத்தில் இருந்து தனிமைப்படும். இது தவிர்க்க முடியாமல் மக்களின் நலன்களுக்கு மாறாக அராஜகத்தை நோக்கி இட்டுச் செல்லும். இதனையே மாவோ 'கட்சி துப்பாக்கி மீது ஆணை செலுத்துகின்றது, கட்சிமீது துப்பாக்கி ஆணைசெலுத்தக் கூடாது' என்கிறார்.

யுத்தம் என்பது அரசியலின் தொடர்ச்சியே என்ற அர்த்தத்தில் இராணுவமானது யுத்தத்தில் ஈடுபடுவதன் மூலம் தனது சிறப்பான அரசியல் கடமைகளை ஆற்றுகின்றது என்ற போது அது தனக்கே உரிய இன்னும் பல அரசியற் கடமைகளைக் கொண்டுள்ளது. இதுனையே மாவோ பின்வருமாறு அழகாகக் கூறுகின்றார் 'செஞ்சேனை வீரர்கள் வெறுமனே சண்டை போட வேண்டும் என்பதற்காக போரிடவில்லை. மக்கள் மத்தியில் பிரச்சாரங்களை மேற்கோண்டு அவர்களை ஸ்தாபன மயப்படுத்தி ஆயத பாணிகளாக்கி அவர்களை புரட்சிகர அரசியல் அதிகாரத்தை நிறுவ உதவ வேண்டும். இல்லாத போது சேஞ்சேனையின் இருப்பிலோ அதன் போராட்டத்திலோ அர்த்தமே கிடையாது.'

புரட்சிகர யுத்தத்தின் ஆரம்பத்தில் நிராயுத பாணிகளான மக்கள் பலம் பொருந்திய எதிரியின் முன்னால் நிறுத்தப்பட்டுள்ளார்கள். ஏதிரியானவன் இராணுவத்தின் பயிற்சியாலும் ஆயுதங்களினாலும் மேல் நிலையில் உள்ளான். நிதி மற்றும் ஏனைய வளங்களையும் தனது கையில் வைத்திருக்கிறான். ஆனால் அவன் ஒரு அநீதியான யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதானால் மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கிறான். அத்துடன் அவனது துருப்புக்கள் தமது சொந்த வர்க்க நலன்களுக்கு எதிராகப் போராடுவதினால் உளவியல் ரீதியில் பலவீனமுற்றவர்களாக உள்ளனர். புரட்சிகர இராணுவமானது இந்த நிலைமைகளைக் கவனமாக ஆராய்ந்து தனக்குச் சாதகமான நிலைகளை முன்னேடுத்து எதிரியை அவனுக்குப் பாதகமான அம்சங்களை அவன் முகம் கொடுக்குமாறு செய்யும் மூல உபாயங்களையும், தந்திரோபாயங்களையும் மேற்கொள்கிறது. இங்கு புரட்சிகர இராணுவத்திற்குள்ள சாதகமான அம்சங்கள் வெகுஜனங்களின் ஆதரவும், சொந்தப் போராளிகளின் உணர்வு பூர்வமான இயக்கப் பாத்திரமுமே ஆகும். ஆகவே இவற்றை மேலும் மேலும் வளர்த்தேடுத்து பயன்படுத்த முயல வேண்டும். புரட்சிகர யுத்தம் என்பது மக்களின் யுத்தமாகும். பொதுமக்களை தட்டி எழுப்பி அவர்களைச் சார்ந்து நின்றால் தான் இதில் வெற்றி பெற இயலும்.

இத்தகைய மகத்தான ஒரு தேசியப் புரட்சி யுத்தத்தை சர்வவியாபகமான, அழகான அரசியல் அணிதிரட்டலின்றி வெல்ல முடியாது. எதிரியின் துப்பாக்கி வெடிகளும், எதிரியின் விமானங்களால் வீசப்பட்ட குண்டுகளுமே மக்களின் பெரும்பாலானேருக்கு யுத்த செய்தியை அறிவித்தன. அதுவும் ஒருவித அணிதிரட்டல் தான். ஆனால் அது எமக்கு எதிரியால் செய்து தரப்பட்டது. அதை நாமே செய்து கொள்ளவில்லை. நாம் அரசியல் அணிதிரட்டலை பூரணமாகப் பயன்படுத்தி எதிரியிலும் ஓங்கிவிட வேண்டும். இது உண்மையில் முதன்மையாக முக்கியத்துவமுடையதாக இருக்கையில் ஆயுதங்களிலும் பிற விடயங்களிலுமான எமது தாழ்சியானது இரண்டாம் பட்சம் மட்டுமே. நாடு பூரா விலும் உள்ள சாதாரண மக்களை அணிதிரட்டுவதானது எதிரியை மூழ்கடிக்க பெருங் கடலொன்றை சிருஷ்டிக்கும். ஆயுதங்களிலும் பிற விடையங்களிலுமான எமது தாழ்ச்சிகளை நிவர்த்தி செய்யக் கூடிய நிலைமைகளை சிருஷ்டிக்கம். யுத்தத்தில் சர்வ தேவைகளையும் கடப்பதற்கான முன் தேவைகளை சிருஷ்டிக்கும்.

வெல்லுவதற்கு நாம் பதில் தாக்குதல் யுத்தத்திலும், ஐக்கிய முன்னணியிலும், நீண்ட கால யுத்தத்திலுமே விடாப்பிடியாக இருக்க வேண்டும். ஆனால் இவையேல்லாம் சாதாரண மக்களை அணிதிரட்டுவதில் நின்றும் பிரிக்க முடியாதவை. வெல்ல விரும்புவது ஆனால் அணிதிரட்டலைப் புறக்கணிப்பது 'தேரை வடக்கே செலுத்தி தெற்குக்குப் போக விரும்புவது போலாகும்' அதன் விளைவு தவிர்க்க முடியாது. வெற்றியை பறிகொடுப்பதாகவே இருக்கம்.

### அரசியல் அணிதிரட்டல் என்றால் என்ன?

இராணுவத்திற்கும் மக்களுக்கும் யுத்தத்தின் அரசியல் குறிக்கோளைப் பற்றி கூறுவதாகும். ஒவ்வொரு படைவீரனும் பிரஜையும் யுத்தம் ஏன் நடத்தப்பட வேண்டும் என்பதையும், அது தன்னோடு எப்படி சம்மந்தப்பட்டுள்ளது என்பதையும் புரிந்து கொள்ளல் அவசியமானது. ஏமது குறிக்கோளை சகல

2ம் பக்கம் பார்க்க

# தென்கொரிய தொழிலாளர் போராட்டமும் முதலாளித்துவத்தின் பித்தலாட்டமும்


உலகெங்கும் இன்று போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற போதும் அண்மையில் முதலாளித்துவத்தின் கையாளாகவும், ஏகாதிபத்தியத்தின் ஊதுகுழலாகவும் இருக்கும் தென்கொரியாவில் தொழிலாளர்களின், புதிதாக இயற்றப்பட்ட தொழிற் சட்டத்திற்கு எதிரான போராட்டம் தொடர்கிறது. அமெரிக்காவினதும், ஏகாதிபத்தியங்களினதும் மூளையில் இயங்கும் முதுகெலும்பில்லாத தென்கொரியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை நேற்று இன்றல்ல இது முதலாளித்துவ வளர்ச்சியுடன் கூடியதே. இதை வெறுமனே எதிர்பைத் தெரிவிக்கும் போராட்டமாக பார்காமல் ஒரு வர்க்கப் போராட்டத்தின் வடிவமாகவே இனம் காட்டப்பட வேண்டும். (இங்கு தலைமை தாங்கிய தொழிற் சங்கங்களின் தவறை தனியாக விமர்சிக்கப்பட வேண்டியது) முதலாளித்துவ வர்க்கமானது எப்போதும் தொழிலாளர்களை சுரண்டுவதற்கு ஏற்றாற் போல தொழிலாளர் வர்க்கம் இருக்க வேண்டும் என விரும்புகிறது. அதற்கு ஏற்றவாறே சட்டங்களையும், ஒழுங்குகளையும் உருவாக்கி வருகிறது.

இதனடிப்படையில் தென்கொரியா புதிய தொழிற் சட்டத்தை உருவாகியுள்ளது. இச்சட்டத்தை உருலாக்குகையில் எதிர்கட்சிகள் சபையில் இல்லாதவேளையில் இரகசியமாக மார்கழி 26. 1996 அன்று இப்புதிய சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டனர். இச்சட்டமானது தொழிலா ளர்களின் பல அடிப்படை உரிமைகளை மறுப்பதுடன், முதலாளி தான் நினைக்கையில் எந்தத் தொழிலாளியையும் வேலையில் இருந்து நிறுத்த முடியும் என்பது குறிப்பிடத் தக்கது. இதுனை அடுத்து தொழிலாளர்களின் போராட்டம் வெடித்தெழுந்தது. இதை KCTU (Korean Confederation of Trade Unions ) என்ற தொழிற்சங்கக் கூட்டணியானது தென் கொரிய அரசால் தடைசெய்யப்பட்டது. இதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பல தலைவர்கள் மியொங்டொன் (Myongdon) தேவாலையத்தில் மறைந்து கொண்டனர். இத்தொழிற் சங்கம்தான் இப்போராட்டத்தை தூண்டிவிட்டதாகவும் இத் தூண்டுதல் வடகொரியாவின் தூர்ண்டுதல் என்ற பொய்யையும், புரட்டையும் தென்கொரிய அரசு வாய் கூசாமல் கூறித் தள்ளியது.

இதை இந்த ஏகாதிபத்திய அரசுகளும், அதன் சார்பில் இயங்கும் தொலைத் தொடர்பு சாதனங்களும் மீள மீள வடகொரியாவின் தூண்டுதல் தான் என்று கூறுவதன் மூலம் அடிப்படை உரிமைக்காக போராடும் தொழிலாளர்களின் போராட்டத்தின் மீது சேற்றைப் பூசி வருகிறது. தென்கொரியாவின் சட்டத்திற்கு பின்னால் சந்தைப் பொருளாதாரத்தின் மிகப் பெரிய தந்திரோபாயதம் அடங்கியுள்ளது. உதாரணமாக அடுத்த நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியா கார் உற்பத்தியிலும் கணனி (Computer, Software) யிலும் முண்ணனியாகத் திகழும் எனக் கணிப்பிடப்படுகின்றது.

இதன் காரணமாக கார் உற்பத்தியில் முண்ணனி வகிக்கும் யப்பான், தென்கொரியா போன்ற நாடுகள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. அவ்வாறு அச்சுறுத்தலுக்கு உள்ளாகிய இந்நாடுகள் இந்தியாவின் சந்தையைப் பிடிக்கும் நோக்குடன் தமது தொழிற்சாலைகளை இந்தியாவிற்கு நகர்த்தி வருகின்றன. இதனடிப்படையில் தான் தென்கொரியாவைச் சேர்ந்த ஹூண்டாய் (Hyundai) கார் தொழிற்சாலை தமிழ் நாட்டில் நிறுவப்பட்டு வருகின்றது.


இவ்வாறான முயற்சிகளுக்கு எப்போதும் இடஞ்சலாக இருப்பவர்கள் தொழிலாளர்களே என்ற கருத்தை முதலாளித்துவ அரசுகள் கொண்டுள்ளதால், இதனை முறியடிக்கும் பொருட்டு தென்கொரியாவில் ஏற்படுத்தப்பட்ட சட்டமே இந்த புதிய தொழிற்சட்டமாகும். இதனை எதிர்த்து எழுந்த போராட்டத்திலே கலங்கிய அரசும், காட்டிக் கொடுக்கும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஓர் உடன்பாட்டினால் மீளவும் தொழிற்சங்கத் தலைவர்களுடன் தாம் கதைப்பதாக தென்கொரிய அரசு அறிவித்திருந்தது. அதில் குறிப்பிடத்தக்கது என்னவெனில் தடைசெய்யப்பட்ட 7 தொழிற்சங்கங்களின் தலைவர்களும் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் அறிவித்தது. அரசின்மீது ஏற்பட்ட நம்பிக்கையீனம் காரணமாக மீளவும் 25.1.97 அன்று சுமார் 200,000 தொழிலாளர்கள் ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



முதலாளித்துவ அரசுகளின் கையில் தொழிலாளர் வர்க்கம்!

**அறிவின் நெத்தியடி புரட்டலின் சுவிசேசம் என்ற இக்கட்டுரையை நாம் புதிய கலாச்சாரத்தில் இருந்து மீள்பிரசுரம் செய்கிறோம். விஞ்ஞானத்தின் வளர்ச்சிக் காலகட்டத்திலும் இன்று மக்களை மந்தைகளாக வழிநடத்துவதற்கு முற்படும் மதகுருக்களின் வரலாற்றினை மிகவும் தெளிவாக ஆராய்ந்துள்ளது இக்கட்டுரை.**

# அறிவியலின் நெத்தியடி புரட்டலின் சுவிசேசம்




கிபி 1860 ஆம் வருடம் யூன் மாதம் இங்கிலாந்து ஒக்ஸ்பேட் பல்கலைக் கழக வளாகம் மக்கள் வெள்ளாத்தால் ததும்புகிறது. பற்பல நாடுகளில் இருந்து வருகை தந்திருக்கம் அறிஞர் பெருமக்கள், என்ன நடக்கும் என்று கிசுகிசுத்தவாறு அமர்ந்திருக்கும் பிரபு குலத்தவர்கள் நடைபெற இருந்த மாபெரும் விவாதப் போரை பற்றி ஆரவாரத்துடன் பேசிக்கொண்டிருக்கும் மக்கள் கூட்டம் என ஒக்ஸ்போட் வளாகம் அதிர்ந்து கொண்டிருந்தது.

ஒக்ஸ்பேட்டின் கலகலப்புக்கு காரணம் உண்டு «இயற்கைத் தேர்வின் மூலம் உயிரினங்களின் தோற்றம்» என்ற புத்தகத்தை வெளியிட்டு அன்றைய இங்கிலாந்தில் ஒரு சூறாவளியைக் கிளப்பியவர் சார்ல்ஸ் டார்வின். பரிணாமத் துவக்கத்தை 230 பக்கங்களில் விவரிக்கும் இச்சிறு நூல் ஏற்படுத்திய புயலில் விவிலியமும் பறந்து சென்றது.

இறைவனின் மறைவாக்கு கேள்விக்குள்ளாகப்படுவதை கிறிஸ்தவ பாதிரிகள் கடுமையாக எதிர்த்தனர். போது மேடையில் விவாதத்திற்கு தயார என்று டாவினின் ஆதரவாளர்களுக்கு சவால் விட்டனர். மதத்தின் பிடியில் இருந்து மீண்டும் அறிவியலை மீட்கும் கடமையுணர்வுடன் ஒக்ஸ்போர்டு விவாதத்திற்கு வருகை தந்திருந்தனர் டார்வினின் ஆதரவாளர்களான ஹக்ஸ்லியும், ஹுக்கரும். அறிவின் அடக்கத்துடன் அமர்ந்திருந்த இவ்வறிஞர்களின் எதிரில் ஒக்ஸ்போர்டு மதத்துறையின் பிரபலமான மதகுரு பிஷப் வில்பர் போர்ஸ் கம்பீரமாகத் தலைநிமிர்ந்து வீற்றிருந்தார். அவரைச் சுற்றி வெண் தூணகளாய் ஆண்டவனடியார்கள் மூளையைச் சாணை பிடித்துக் கொண்டு (!) அமர்ந்திருந்தனர். விவாதம் தொடங்கிற்று.

வேத நூலை முத்தமிட்டு, சிலுவை ஏந்திய கரங்களுடன் தொண்டையைக் கனைத்துவிட்டு பேச ஆரம்பித்தார் பிஷப் «மக்களே! பரமபிதாவின் பெயரால் உங்களை வேண்டுகிறேன் சாத்தானின் அவதாரமான சார்ல்ஸ் டார்வின், நீங்களெல்லாம் குரங்கில் இருந்து தோன்றியவர்கள் என கூசாமல் கூறுகிறான். பாலுட்டி சீராட்டி வளர்த்த உங்கள் பாட்டன் மார்களும், முப்பாட்டன் மார்களும் குரங்குகளா? இதை ஏற்கப் போகிறீர்களா? எனது கேள்விக்கு இங்கு அமர்ந்திருக்கும் குரங்கின் சீடர்கள் என்ன பதில் தருவார்கள். இவர்கள் குரங்கிலிருந்து உதித்ததாகச் சொல்வது தன் பாட்டன் வழியாகவா, பாட்டிவழியாகவா» என்று கேலிசெய்து திருப்தியுடன் இறுதியில் «டார்வினின் ஆராச்சி சத்தியமறையின் புனிதக் கொள்கைக்கு எதிராக இருப்பதாகக் கூறி இருக்கையில் அமர்ந்தார். புனிதக் கொள்கையால் உணர்வூட்டப்பட்ட மக்களின் கரவொலியின் நடுவில் பேசவந்தார் டார்வினின் சீடர் ஹக்ஸ்லி.

வேறியூட்டப்பட்ட மத உணர்வுகளின் மத்தியில் உண்மையைப் பேசுவதற்க ஒரு மனிதனுக்கு எத்தனை தைரியம் வேண்டும். மதமெனும் குகையில் இருந்து மக்களை விஞ்ஞான உண்மையெனும் ஒளியை நோக்கி ஈர்ப்பதற்கு அனைத்து அவலங்களையும் சகித்துக் கொண்டார் ஹக்ஸ்லி. டார்வினின் ஆராச்சியை விரிவாகப் பேசினார். ஒரு பாதி மக்களையாவது உண்மையை ஏற்கவைத்தார். பொது விவாதம் முடிந்தது. ஆனால் டார்வின் எழுப்பிய புயல் ஓயவில்லை. குரங்குகளைக் கண்ட இடமெல்லாம் கல்லாலடித்து துரத்தினார்கள் மறை உணர்வு கொண்ட மக்கள்.

இங்கிலாந்து தேவாலயத்தில் கருப்புடை தரித்து பக்த கோடிகள் கால்களின் கீழ் டார்வினின் புத்தகத்தை மிதித்தவாறு இறைவனின் புனிதக் கொள்கையை சாத்தானாகிய

டார்வினிடம் இருந்து காப்பதாக உறுதி பூண்டனர்.
கி.பி 1950 'பொதுவுடமைப் பூதம்' ஐரோப்பிய நாடுகளில் பற்றிப் பரவும் காலம். கம்யூனிஸ்ட் சாத்தானிடம் இருந்து புனிதக் கொள்கையைக் காப்பதற்கு போப் பயஸ் XII எச்சரிக்கிறார். «பரிணாம வாதத்தை நாம் எதிர்க்கவில்லை. ஆனால் இதைக் கொண்டு பொருள் முதல் வாதிகளும், நாத்திகர்களும் உலகை உருவாக்கிய தேவனின் பங்கை மறைக்கிறார்கள். எந்த உயிரின மூலப்பொருளில் இருந்து மனிதன் தோண்றினானோ, அதைப்படைத்தவன் தேவனே.» என்று அருள்மொழிந்து பரலோகம் சென்றார்.
கி.பி 1996. வாடிகன் நடத்தும் கல்வி நிறுவனங்களுக்கு போப் ஜான் பால் II செல்வதாவது, «மனிதன் ஒற்றை அடியில் உருவாக்கப்பட்டான் என்பதில்லை. தேவனால் படிப்படியாக பரிணாம வளர்ச்சி மூலம் உருவானவன் என்பதை ஏற்கலாம் சென்ற நூற்றாண்டில் (டார்வினால்) வெளியிடப்பட்ட பரிணாம வளர்ச்சி பற்றி தத்துவம், ஆய்வு செய்யும் அறிஞர்களுக்கும், புதிய கண்டு பிடிப்புகளுக்கம் குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறது. ஆனால் அனைத்திற்கும் மூலகர்த்த தேவன் தான் என்று ஏற்கனவே போப் பயஸ் XII அருளியிருப்பது முக்கியமான ஒன்றாகும். »
போப் அவர்களே! குாலில் போட்டு மிதித்த சாத்தானின் கருத்தை 137 ஆண்டுகள் களித்து சிறிது ஏற்கிறோம் என்று ஏன் நடிக்க வேண்டும். உலகத் தோற்றம் குறித்து பைபிள் கூறுவது நீங்கள் அறியாததல்ல.
«ஐந்து நாட்களில் அண்ட – பிண்ட சராசரங்களைப் படைத்த பரமபிதா, ஆறாவது நாள் களிமண்ணை உருட்டி ஆதாமையும், அவன் விலா எலும்பிலிருந்து ஏவாளையும் படைத்துவிட்டு ஏழாவது நாள் ஒய்வேடுக்கச் சென்றார்.»
ஆறு நாட்கள் வேலை ஏழாவது நாள் விடுமுறை என்பது தொழிலாளர் வர்க்கம் போராடிப் பெற்ற உரிமை என்றாலும் அந்த உரிமையை உங்கள் பரம பிதாவிற்கு வழங்குவதில் எமக்கு ஆட்சேபனை இல்லை.
ஆனால் டார்வினின் பரிணாமத் தத்துவத்தை சிறிது ஏற்றுக் கொண்டாலும் பைபிளின் முதல் அத்தியாயம் தவறாகுமே! மாற்ற வேண்டாமே!
இல்லை எதுவும் மாற்ற வேண்டியதில்லை. போப்பின் அறிக்கைகளுக்கு பொழிப்புரை தருகிறார் கத்தோலிக்கத் திருச்சபையின் தகவல் தொடர்பாளர் பிரான்சிஸ் மானிஸ்கால்கோ. அதாவது போப்பின் பரிணாமத் தத்துவம் பற்றிய கருத்தை, அவர் மதத் தலைவர் என்ற முறையில் கூறியதாகவோ, கத்தோலிக்கர்களுக்கு வழிகாட்டும், கோட்பாடு என்ற முறையில் செல்வதாகவோ தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாதாம். எங்களுக்குப் புரிகிறது ஏன் இந்த இரட்டை வேடம்?

> **சந்திரனுக்கு விண்கலம் அனுப்பியது முதல், உயிர் காக்கும் மருந்துகள் வரை மனிதகுல ஊளியர்களான விஞ்ஞானிகள் கண்டு பிடித்தார்கள். கருணையே உருவான தேவனின் ஊளியர்களோ கழுகுமரத்தைக் கண்டு பிடித்தார்கள்.**

விஞ்ஞானிகள் தாங்கள் கண்ட உண்மைகளுக்கு உங்களின் அங்கீகாரத்தை வேண்டி நின்ற காலத்தில் அதை மறுத்தீர்கள் இன்று சந்திரனுக்கு விண்கலம் அனுப்புவது முதல் கணிப்பொறியின் இன்ரர்நெற் வரை எந்த விஞ்ஞானியும் உங்களது அக்மார்க் முத்திரைக்கு ஏங்கவில்லை. ஆனால் மதம் உயிர் வாழ்வதற்கும், காலத்திற்கு ஏற்றவாறு புனரமைப்பதற்கும் அறிவியல் தேவைப்படுகிறது உங்களுக்கு. அதில் கடுகளவாவது நேர்மை இருக்கிறதா? இவ்வளவு காலமும் திருச்சபை அறிவியல் அறிஞர்களை தவறாக நடத்தியது – இனிஅப்படிச் செய்ய மாட்டோம் என்று குற்றம் புரிந்த உணர்வுடன் பாவ மன்னிப்பு பெறுவது தானே நியாயம்!
அறிவியலின் அற்புதங்களை அனுபவித்துக் கொண்டு தேவனின் 'அற்புதங்களை' பிரச்சாரம் செய்வது, பிறகு தேவனின் மகிமை காப்பதற்கு பிரச்சாரம் அறிவியலை அவமதிப்பது என்ற திருச்சபையின் திமிருக்கும், இரட்டை வேடத்திற்கும் நீண்ட வரலாறு உண்டு.
மனிதனின் இன்பம் தகும்பும் வாழ்க்கை பரலோகத்தில் மட்டும் தான் என்று மாயை காட்டிய மதவெறியர்களின் கூற்று பொய்யாக்கி பூமியில் அத்தகைய அற்புதங்களைச் சாதித்திருக்கிறது அறிவியல். நேற்றைய வானொலி முதல் இன்றைய கணிப்பொறி வரை அதன் சாதனைகள் தொடர்கிறது. முனித குலத்தின் இத்தகைய பிரமாண்டமான அறிவியல் – தொழில் நுட்பப் புரட்சிக்கு அடிப்படையான விஞ்ஞான உண்மைகளைக் கண்டவர்கள் மத்திய கால விஞ்ஞானிகள்.
இயற்கையின் புதிரை விடுவிக்க காட்டிலும், களத்திலும், கடலிலும் திரிந்தார்கள். ஊனையும் – உயிரையும் வருத்தி தான் கண்ட உண்மையை நிருபிக்க தளராமல் போராடினார்கள். மதத்தின் பிடியிலிருந்து மனித சிந்தனையை விடுவிக்க திருச்சபையின் கழுவாய்களுக்கு தங்களது உயிரைக் கொடுத்தனர்.
பேராற்றல் மிக்க சிந்தனையையும், போராட்டமும் கொண்ட இவர்களைத் தான் மாபெரும் மனிதர்கள் என்று குறிப்பிடுகிறார் ஏங்கல்ஸ். இவர்கள் சிந்திய ஒவ்வெரு துளி ரத்தமும் அறிவியலில் உலகம் அசுர வேகத்துடன் வளரக் காரணமாயிருந்தது. இவர்கள் இழந்து போன வாழ்க்கையில் தான் இருபதாம் நூற்றாண்டின் மனிதகுல வாழ்க்கை உயிர்வாழ்கிறது.
இத்தகைய மாபெரும் மனிதர்களுக்கு எதிராகப் போப்பும், திருச்சபையும், ஏனைய பாதிரிகளும்நடத்திய பயங்கர

வாத நடவடிக்கைகளை அறியும் நாகரீக உலகின் மனிதர்கள் எவரும் வெட்கப்பட வேண்டும். கோபம் கொள்ள வேண்டும்.

14 அறுவைச்சிகிச்சையின் போதும், பிரசவத்தின் போதும் வலிதெரியாமல் இருப்பதற்காக பயன்படும் குளோரபோம் எனும் மயக்க மருந்தை இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் யங் சிம்ஸன் சென்ற நூற்றாண்டில் கண்டு பிடித்தார். இதற்கு திருமறையில் ஆதாரமில்லையே என்று கடுமையாக எதிர்த்தார்கள் பாதிரிமார்கள். "கஷ்டதில் நீ குழந்தை பெறுவாய்" எனும் பைபிள் வாக்கியத்தைக் கொண்டு தாய்மார்கள் பிரசவத்தின் போது மயக்க மருந்து பயன்படுத்தக் கூடாது அப்போது தான் தாய்பாசம் இருக்கும் என வற்புறுத்தினார்கள்.

இரத்தத்தை வகைபிரித்து இரத்த வங்கியில் சேமிக்கப்படும் முறையினால் உலகமேங்கும் பலகோடி மனித உயிர்கள் காப்பாற்றப்படுகிறது. மனித ரத்தம் பற்றிய ஆய்வை நடத்திய 'குற்றத்திற்காக' செர்வேட்டஸ் எனும் விஞ்ஞானி கழுகு மரத்தில் ஏற்றி உயிருடன் கொளுத்தப்பட்டார். புரமபிதாவின் புனிதம் காக்க இந்தத் தண்டனை வழங்கியவர் கால்வின் என்ற புரட்டஸ்லாந் பாதிரியார்.

தேவனின் மகிமை கூறி ஆவியெழுப்ப, விமானமேறி உலகைச் சுற்றி சுற்றி வருகிறார்கள் சுவிசேசத்தின் ஊழியர்கள். தேவனின் செய்தியை திருச்சபையின் விண்கோள்கள் பூமி உருண்டையின் மீது பொழிந்த வண்ணம் உள்ளன. ஆனால் உலகம் உருண்டையானது, தட்டையானதல்ல. பூமி சூரியனைச் சுற்றி வருகிறது என்று சொன்ன கியார்டனே புருனோவை உயிரோடு கோளுத்தினார்கள் கத்தோலிக்க மதகுருமார்கள்.

வானுலகக் கோள்களின் சூழற்சி பற்றிய தனது கண்டு பிடிப்பை 36 ஆண்களுக்கு முன்பே நூலாக எழுதியும், திருச்சபையின் கொலை வெறிக்குப் பயந்து போன கோப்பர் நிகஸ் இறுதியில் தனது மரணப்படுக்கையில் இருந்து வெளியிட்டார்.

பூமியின் இயக்கத்தையும், சூரியனைச் சுற்றி வருவதையும் கண்டுசொன்ன கலிலீயோ திருச்சபையினால் சித்திரவதை செய்யப்பட்டார். ஆவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுனால் கலிலீயோ விவிலியத்தின் 'உலகம் பற்றிய உண்மைகளை' ஏற்று தன் கண்டு பிடிப்புகளை மறுக்க வேண்டி இருந்தது. கலிலீயோவின் தொலைநோக்கியை சாத்தானின் கருவி என்றார்கள் கிறிஸ்தவ பாதிரிகள்.

கி.பி 370இல் அலெக்காண்டிரியாவில் (இன்றைய கெய்ரோ நகரம்) அரும்பாடு பட்டு சேர்த்து வைத்த நூலகத்தையும், அருங்காடுசியத்தையும் ஆர்ச்பிஷப் சிரில் தலைமையிலான பாதிரிப்படை சூறையாடிக் கொளுத்தியது. நூலகத் தலைவரும், பெண் விஞ்ஞானியுமான ஹைப்பேஷியாவை சித்திரவதை செய்து கொளுத்தினர்.

விஞ்ஞானிகளை வேட்டையாடிய திருச்சபையின் ரத்தக்கறை படிந்த வரலாற்றின் ஒரு சில துளிகள் தான் இவை. அனைத்துலக பாதிரிகளின் எண்ணிக்கைகைவிட அவர்கள் இழைத்த குற்றங்கள் அதிகமானதாகும்.

இன்று மதிப்பிட முடியாத அளவிற்கு சொத்துக்களைக் குவித்து வைத்துக் கொண்டு திருச்சபையின் பாதிரிகள் வாழும் உல்லாச வாழ்கைக்கு வசதிகள் செய்தது அறிவியல் தான் விவிலியம் அல்ல.

கூன் விழுந்த முதுகுடன், மண்புழுவை மட்டும் மணிக்கணக்காகப் பார்த்துக் கொண்டிருப்பார் டார்வின். தான் கண்ட மயக்க மருந்தை சோதனை செய்ய தன்னுடம்பையே கருவியாக்கி பல தடவை மயக்கமடைந்தார் சிம்ஸன். எந்த உண்மையையும் சோதித்தறிய அலைந்து திரிந்த கலிலீயோ தன் சொந்த வாழ்வின் எழிலைத் துறந்தார். மரணப் படுக்கையிலும் கூட கோள்களின் அமைப்புப் பற்றி 'பிதற்றிக்' கொண்டிருந்தார் கோப்பர்நிகஸ். உயிரோடு கொளுத்தப்பட்ட போதும் விவிலியத்தின் முட்டாள் தனத்தை ஏற்க முறுத்தார் புருணே.

எதிர்காலத்தில் திருச்சபை தமக்க அங்கீகாரம் வழங்கும் என்ற நம்பிக்கையிலா இவர்களஇ தங்களை வருத்திக் கொண்டார்கள்? தேவனின் ஊழியர்களே சொல்லுங்கள் யார் பாவிகள் யார் சாத்தான்கள்.

குளிரூட்டப்பட்ட அறையில் நித்திரை கொண்டு, காலை ஏழுந்து உயர்தர வையினைக் குடித்து, வறுத்த முழக் கொழியை முழுங்கி, பளபளக்கும் வெள்ளிப்பட்டு அங்கியை ஊடத்தி, மாருதிகாரில் பவனிவந்து, தேவாலையத்தில் கூடியிருக்கும் மந்தைகள் முன்னால், புளித்த ஏப்பத்துடன், பாதிரி திருவாய் மலர்வார், «கஷ்டத்தில் ஜீவிக்கின்ற கத்தரின் குழந்தைகளே சாத்தானிடம் இருந்து விலகிஇருங்கள்.»

எங்கள் விஞ்ஞானிகளின் கால் தூசி கூடப் பெறாத பாதிரிகளே இரண்டாயிரம் ஆண்டுகளாக செய்து வரும் தேவ ஊழியம் இதுதானே! திருமறையில் ஆதரமில்லையே என்ற எந்த அறிவியல் உண்மைகளை மறுத்து விஞ்ஞானிகளை அழித்தீர்களோ அதே அறிவியலை உங்களுடைய வாழ்கையில் வெட்கமில்லாமல் பயன்படுத்தி வருகிறீர்களே. சுவிசேசப் பிரசங்கிகளே பதில் கூறுங்கள்.

போமிங் 707 விமானத்தில் அனைத்துப் பாதிரிகளையும் அள்ளிப் போட்டு இமயமலையின் உச்சியில் கொண்டுபோய், பாராசூட் இல்லாமல் தள்ளி விட்டால் நாங்கள் குற்றவாளிகளல்ல, ஏனென்றால் புவிஈர்ப்பு விசையைக் கண்டு பிடித்த நியூட்டன் பைத்தியம் என்று பட்டம் கட்டியது திருச்சபைதான்.

குடல்வால் அறுவைச் சிகிச்சைக்காக வாத்திக்கானில் 3 ஆண்டுகள் தலைமறைவாக இருந்த போதுதான் போப் முன்னர் கண்ட அறிக்கையை வெளியிட்டார். சிம்சனின் ஆவியும், செர்வெட்டஸின் ஆவியும் போப்பிடம் வந்து நியாயம் கொட்டதோ! குளோரோபோமும், ரத்தமும் கிடையாது என மறுத்திருந்தால் போப்பின் கதி என்ன? அறிவியலின் ஒழுக்கம் அவ்வாறு செய்ய

அனுமதிக்கவில்லை. ஆனால் கருனையே உருவான கடவுளின் ஒழுக்கம் தான் அதை அனுமதிக்கிறது.
இப்படி கொலைபாதாக வரலாற்றைத் தெரிந்து கொண்டும் கல்லுளி மங்கன் போல சாந்த சோரூபக்காட்சி அளிப்பதற்குத் தான் கிறிஸ்தவ பாதிரிகளுக்கு பத்தாண்டு காலப் பயிற்சி கொடுக்கிறார்கள் போலும்.
'கிறிஸ்தவன் மாபெரும் ஞனி (ஏசுகிறிஸ்து) மக்களின் ஆத்மாக்களுக்கு விடுதலை கோரி, தமது உடம்பைத் தியாகம் செய்தார். நவீன கல்வியறிவு மிகுந்த ஞானியோ (பாதிரி) தனது சேந்த அத்மாவின் விடுதலைக்காக மக்களின் உடம்பைத் தியாகம் செய்கிறார்.' என்று கார்ல் மார்க்ஸ் சொன்னதை நிருபிக்கிறது 2000ம் ஆண்டு காலத்திருச்சபை வரலாறு.
மனித குலத்தின் ஊழியர்களான விஞ்ஞானிகள் உயிர் காக்கும் முறைகளைக் கண்டு பிடித்த போது தேவனின் ஊழியர்களான பாதிரிகளோ கழுகுமரத்தைக் கண்டு பிடித்தார்கள். ஏனவேதான் தேவனின் தேவகுமாரனைச் சிலுவையில் ஏற்றியவன் பிலாத்தா, திருச்சபையின் முன்னோர்களா என்று சந்தேகம் வருகிறது.
ஞாயிற்றுக் கிழமை தோறும் கோடிக்கணக்கான மக்களுக்கு பாவ மன்னிப்பு அள்ளி வீசும் பாதிரி வகையறாக்கள் 2000 ஆண்டுகளாக செய்து வரும் குற்றங்களுக்கு யாரிடம் மன்னிப்பு பெறுவார்கள்? விவிலியம் இதற்கு என்ன தீர்ப்புச் சொல்கிறது.
விஞ்ஞானம் வளர்ந்து விட்டதால் பூவுலகின் ஒழுக்கம் கெட்டுப் போய்விட்டது என்று இறுதி அஸ்திரம் ஒன்றை ஏவிகிறார்கள் பைபிளின் ஒழுக்கசீலர்கள். அதாவது களிமண்ணில் இருந்து ஆதாம் தோண்றினான் ஒழுக்கம். பரிணாம வளர்ச்சி என்றால் ஒழுக்கக்கெடு. பூமி தட்டை என்றால் ஒழுக்கம். உருண்டை என்றால் ஒழுக்கக்கேடு. அதாவது பெய்யும் முட்டாள் தனமும் ஒழுக்கம், உண்மையும் பகுத்தறிவும் ஒழுக்கக்கேடு.
இந்த 'ஒழுக்கத்தை' பிரச்சாரம் செய்ய அனுமதிக்காததால் முன்னாள் சோசலிச நாடுகளில் கம்யூனிஸ்டுக்கள் கிறிஸ்தவ மதத்தை 'கொடூரமாக' ஒடுக்கினார்கள் எனக் கூப்பாடு போடுகிறார்கள். 'புதிய ஏற்பாட்டின்' காவலர்கள். ருசியாவிலும், சீனாவிலும் இந்த ஒழுக்கத்திற்கு கிடைத்த வெற்றியைத் தான் திருச்சபையும் தேவனாகிய அமெரிக்காவும் கைகோர்த்து கொண்டாடுகிறார்கள்.
இரத்தக் கறை படிந்த வரலாறு திருச்சபைக்கு மட்டும் சொந்தமானதல்ல. பார்ப்பன இந்து மதமும், இசுலாமும் தனித்தனியே வேதப்புத்தகங்கள் வைத்திருந்தது போலவே, தங்கள் சொந்தக் கழுகு மரங்களையும் நிறுவியிருந்தார்கள்.
ஆளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாிவின் திருநாமத்தால் ஆரம்பிக்கும் திருக்குர்ரானுக்கு 35 சிறப்புப் பேயர்கள் உண்டு. அதில் ஒன்று அந்நதீர் – அச்சுறுத்தி எச்சரிப்பது. பைபிளில் பரமபிதா உலகை ஆறு நாட்களில் படைத்தார். குர் ஆனில் அல்லா உலகை ஆறு கட்டங்களாகப் படைத்தார். பரமபித களிமண்ணில் இருந்து ஆதாமை படைத்தார். அல்லா சுட்டகளிமண்ணில் இருந்து ஆதாமைப் படைத்தார். பைபிளுக்கும் குர் ஆனுக்கும் இடைவெளி 557 ஆண்டுகள்.

> *கடவுளைத் துரத்துவதை விட கடின பணி கடவுளின் ஏஜெண்டுகளைத் துரத்துவது தான்.*

ஆனால் கடவுள் தங்களை எப்படிப் படைத்தார் என்ற உண்மையைத் திருக்குர்ஆன் விளக்கத்திலிருந்து தெரிந்து கொள்வதற்கு முன்னரே 6 நூற்றாண்டுகளுக்கு முன் இருந்து சிந்து சமவெளித் திராவிடர்கள் கடவுளைப்படைத்து விட்டார்கள் – சுட்ட களிமண்ணைக் கொண்டு.
தசாவதாரத் தத்துவத்தை கைவசம் வைத்திருக்கின்ற பார்பனர்களுக்கு படைப்புத் தத்துவம் பற்றிக் கவலை இல்லை. அப்படி என்றால் டார்வினின் பரிணாமத் தத்துவம்? தஞ்சை சரபோஜி நூலகத்தில் உள்ள ஓலைச் சுவட்டிலிருந்து திருடப்பட்டதாக இருக்கலாம். இந்தக் கூற்றை திட்டவட்டமாக சைவர்கள் மறுத்தார்கள். தசாவதார நாயகன் விஷ்ணுவைப் படைத்தவன் சிவன் என்றார்கள்.
ஆனால் கோஷ்டிப் பூசலின்றி அவர்கள் ஏற்கும் படைப்புத் தத்துவம் ஒன்று வேதத்தின் புருஷ சூக்தத்தில் இருக்கிறது. விராட் புருஷனின் தலையிலிருந்து பிராமணர்களும், தோளிலிருந்து சத்திரியர்களும், தொடையிலிருந்து வைசியர்களும், பாதத்தில் இருந்து சூத்திரர்களும் தோன்றினார்கள் என்ற 'உயரிய' படைப்புத் தத்துவம் தான் அது.
ஒரு வேளை டார்வின் தத்துவத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும், தரத்தால் பிரிக்கப்பட்ட நான்கு வகைக் குரங்குகள் அவர்களுக்குத் தேவை.
ஈரேழு பதினாலு உலகத்திலிருந்தும் கடவுளைத் துரத்தும் பணியை விஞ்ஞானிகள் செய்து விடுவார்கள் அதில் ஐயமில்லை. ஆனால் கடவுளைத் துரத்துவதைவிட கடினமான பணி கடவுளின் ஏஜண்டுகளைத் துரத்துவது தான். ஆதை விஞ்ஞானிகள் செய்ய முடியாது. ஆதற்கு சமூக விஞ்ஞானிகள் வேண்டும். ஆம் கம்யூனிஸ்டுக்கள் வேண்டும்.

**3 பக்கத் தொடர்ச்சி (அரசியலும்)**

கடந்துகால தமிழீழப் போராட்டத்தை பார்ப்பது எமது இன்றை நெருக்கடிக்கான காரணங்களை புரிந்து கொள்ளவும், அவற்றை திருத்தி மகத்தான வருங்காலத்தை நோக்கி நடை போடவும் வழிசமைக்கும்.
(அடுத்த இதழில் தொடரும்)